பிசுமில்லாகி.

இஃது

அஜாத் அலியுல்லாவவர்கள்

மணம்புரிந்த

பப்பாத்தியாரம்மாவின்.

இதனை

மதுரைமாநகரம்

உசைநயினார் குமாரராகிய

செயிதுமீராப்புலவர்

பாடியது.

இராமநாதபுரம்-ரவுன்ஷாப்புக்கடை

ப-வெ, முகம்மது இபுறாகீம்சாகிபு

பலபிரதிகளைக்கொண்டும்முகபாடத்தினாலும்

பரிசோதித்துப் பிரதிக்கிணங்கச்

சிந்தாத்திரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியாரவர்களாற்

றமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

௲௮௱௯௰—ஜூன்மீ.

பிசுமில்லாகி.

பப்பரத்தியாரம்மானை.

காப்பு-வெண்பா.

எப்படைப்புந்தான்படைத்த இறையவனே நின்னருளால் *
பப்பரத்தியம்மானை பாடுதற்கு-இப்புவியில் *
மக்கந்தனிலுதித்த முகம்மதனூர்தன்பொருட்டில் *
ஹக்கனே நீயுதவியாம் *

கடவுள்வாழ்த்து.

மலையுமலைகடலு மற்றுமுள்ளவான்புவியும்
நிலையாயணியணியாய் நீதியுடனேபடைத்து
அறுசங்குறுசு மழகானசொர்க்கமெல்லாம்
வரிசையுடனமைத்த வல்லவனே நின்னருளால்
செப்பமுடனலியார் சென்றுயெமன்ராச்சியத்தில்
பப்பரத்தியாரைப் பாங்காமணமுடித்த
கதையதனைப்பாடுதற்குக் காவலனேகாத்தருள்வாய்
இதைமனதிலெண்ண வேகனுதவிசெய்வாய்
ஆதியருளாலே யப்துல்லாபெற்றமைந்தர்
வேதநபிபாதம் மென்மேலும்போற்றிசெய்வேன்
அன்பிநெறியுடைய அபுபக்கர்பாதமதை
இன்பமுடன்பணிவே னெப்போதுந்தப்பாமல்
சரகுதனிலுள்ளபடி தன்மகனைவதைசெய்தோர்
தரணிதனிலுமறுகத்தா தாள்மலரையான்பணிவேன்
சதுவான்வரிப்பலகை தப்பாமலேயெழுதும்
உதுமானார்பாதம் ஒருநாளும்யான்மறவேன்
அறுதினமீண்டுவர வாலநபிதன்கரத்தில்
திருவாழிவாங்குமலி சீர்பாதம்யான்மறவேன்
வல்லோனலிபுலியார் மைந்தரசனுசைனார்
நல்லோர்பதமிரண்டும் நாடோறும்யான்பணிவேன்
முன்னூற்றிப்பதின்மூன்று றசூல்நபிமார்கள்பதம்
என்றும்பணிந்திடுவே னெப்போதுந்தப்பாமல்

பட்சத்[illegible]டனிறையைப் பாங்காய்வணங்குகின்ற
லட்சத்திருபத்திநாலாயிரம் நபிமார்தம்பணிவேன்
ஜெகத்திலுள்[illegible]ளார்கு பிர[illegible]த்தித் தீனைமிகவிளக்கி
பருதாதில[illegible]யதின்தாள்பணிவேன்
நாகூரில்வாழுகின்ற நல்லதொருமீராவின்
வாருடையநல்ல மலர்ப்பாதம்யான்பணிவேன்

அவைய[illegible]டக்கம்.

[illegible]ரிகைதன்னூர்கள் [illegible]றம்பெரியோர்களுடன்
வீரியமாச்செப்பதியேன் மெய்ப்புலவர்தங்கள்முன்னே
தர்[illegible]திலெதிரே நானுமோராசைவைத்து
அ[illegible]கிலசொன்னதுபோ லப்புவியிற்பாடலுற்றேன்
அ[illegible]ள்ளநாய னவியார்திருக்கதையை
சிந்தைமகிழ்ந்து சீர்புவியிற்பாடலுற்றேன்
கூடல்நாச்சியன் கோமானருளுடையோன்
ஆடவர்கள்மெய்க்கு மசர்ராவிதானின்ற
[illegible]கழுடைய வுசைநயினார்தன்பாலன்
[illegible]ப்பிரபலிக்கதையைச்செய்துமிராவுரைத்தேன்
கோமானருள்பெருகும் கூறுமக்கமாநகரில்
தேமாநகரில்பொசித்த செல்வமுகம்மதரும்
திருமதீனமாநகரில் சென்றகிஜரத்து
வருடமேற் [illegible]ரித்தி ரூபீருபத்தஞ்சதனில்
[illegible]வருடமதிற் [illegible]மாதத்திலே
[illegible]ருலதிற்றேதி [illegible]ட்டாநாட்டனிலே
வெள்ளிக்கிழமைதனில் [illegible]யலுகவிக்கதையை
பள்ளிதனிற்கொத்[illegible] யரிவாய்த்தொழுதபின்பு
[illegible]புலவர்முன்னே உசத்துரைத்தகாவியத்தில்
[illegible]சையைக் நானேதெளித்தெடுத்து
இப்[illegible]லில பிழையோறுதவிபிழல்
[illegible]க அடியேனுன்பாடலுற்றேன்

மதினாநகரத்தில்முகம்மதுநபிவரலாறுகூறல்.

[illegible] [illegible]குநபிக்கு
[illegible]டத்தானிறங்கி
[illegible] [illegible]பணித்துசலாமுரைத்துக்
[illegible]டவான்பரிபுள் கட்டுமெட்டாய்த்தானிறங்கி

ஐய்யோனருளாலே துல்பக்ருவானுடனே
வெய்யோனொளிபோல விண்ணிறங்கிறபிதனக்குத்
தூதர்சலாஞ்சொல்லித் தூதுதான்வந்துசொல்ல
நீசருடனேகலிமா நிச்செயமாய்ச்சொல்லாத
காவர்களைவெட்டிக் கருவறுத்துத்தீருக்கி
பாவர்தலைத்துப் பயிரோற்றுநாளையிலே

எமன்பதியாளுங் கோவராசன்வரலாறுகூறல்.

எமன்பதிதனிலே யிருக்குங்கோவராஜனுக்கு
சமர்பொருதும்வீரர்களுஞ் சகல துரைமன்னர்களும்
வாருடனேகுஞ்சரங்கள் வல்லமையுடனுயிரங்காண்
பக்க[illegible]தினர் பதினாயிரங்களுண்டாம்
மட்டிலடங்காத மற்றுமுள்ளகால்ப்படைகள்
எட்டுலட்சம்பேர்க ளெண்ணமுடியாது
இப்படிசேதாக விருக்குமந்தராஜனுக்குஞ்
செப்பமுள்ளமந்திரிகள் சேர்ந்தபனிரெண்டுமுண்டாம்
சமரினில்வல்லவன்காண் தானிருக்கும்பட்டணந்தான்
எமனென்னும்பட்டணமா மிவவரசாய்த்தாளுநும்
கோட்டையறுபதின்காதம் குறிப்பானநீளமுண்டாம்
நாட்டைவளைந்தயிடம் நல்வதொருமுப்பதுண்டாம்
அரசனிருக்கின்ற வரண்மனையுங்காதவழி
வரிசையுடனரசன் வாழ்ந்திருக்கும்நாளையிலே
மன்னனிடசீர்மையிலே மான்மனைகள்மெத்தவுண்டு
சொன்னமொழிதப்பாது தய்யோன்பொருட்டாலே
சேர்ந்தவரசனுக்குச் செல்வவெகுநாடுமுண்டாம்
வாய்ந்தநல்லபட்டணமும் வருதாதெனுநாடும்
ஆயபொனும்பட்டணமு மருதமுதுநாடும்
மாயருள்ளகீழ்நாடு மற்றுமுள்ளமேல்நாடும்
சீனமெனுநாடுஞ் சேர்ந்தசுருநாடுகளும்
கானமுள்ளநாடுங் கருணைவசநாடாம்
அந்தந்தநாட்டிலுள்ள வரசரெல்லாம்வந்துநிதம்
சிந்தைமகிழ்ந்து திரைகள்செலுத்திநிற்க
ஒப்பஞ்செலுத்தி யுலகாளுநாளையிலே
செப்பமுள்ளயெமன்பதியித் தினமுமழைபொழிய
இறையோனருளா லிருக்குமந்தராஜனிட
ராணியையாளுதற்குத் தானுங்குழந்தையில்லா
பெண்குழந்தையெட்டு பிறந்திருக்குநாளையிலே

அன்னல்மகாராஜனப்போமனஞ்சலித்து
கோயிலுங்கோபுரங்கள் குளங்கள்மிகவுண்டாக்கி
ஆயநல்லபத்திகளை யன்பாகத்தால்வணங்கி

அரசன்மனைவிகெற்பமாகுதல்.

இருக்குமந்தவேளையிலே இறையோனருளாலே
பெருகவரசியர்க்குப் பிள்ளைத்தரித்ததுவே

அரசனிடதேவியரு மன்பாகச்சூலாகி
ஷிரிசமுடனிருந்தாள் பேருலகந்தானறிய

அந்தநல்லவேளையிலே யரசனுந்தேவியரும்
சிந்தைமகிழ்ந்து தெளிவாயிருக்கையிலே

மன்னன்மனஞ்சலித்து மனைவியைப்பார்த்தேதுசொல்வான்
உன்னுடையவயற்றி லுதித்ததொருகெற்பமுந்தான்

ஆண்குழந்தையுண்டானா லன்பாகவைத்திருப்பேன்
வீண்பிள்ளைப்பெண்ணானா லுனைவெட்டியெறிந்திடுவேன்

சொன்னமொழிகேட்டணங்கு துயரமுற்றிருக்கையிலே
வன்னமயிலனையாள் வகைபத்திமாதனுசென்று

வயறுநொந்திருக்கையிலே மருத்துவச்சிக்கேதுசொல்வாள்
கயல்விழியேமருத்துவச்சிக் கன்னிகையேநீகேளாய்

ஆண்குழந்தைப்பெற்றேனென்றா லன்பாகநீயிருப்பாய்
பெண்குழந்தைப்பெற்றேனென்றால் பேருலகிற்றெரியாமல்

மறைத்திடுவாயானக்கால் வரிசையதுதருவேனென்
றுரைத்தமொழிகேட்டு முகந்திருத்தாள்மருத்துவச்சி

இராசன்மனைவிவயற்றில் பப்பரத்தியார்பிறக்குதல்.

ஐவர்கள்வாராம விளங்கொடியாள்சூல்கலைந்து
பாவையொன்றுபெற்றாளே பைங்கிளியாள்மின்னொளிபோல்
பெண்ணென்றறியாமல் பெரியோனுதவியினால்
ஆணென்றுசொல்லி யரசனுக்குமான்விடுத்தாள்
தோழியர்களோடிச் சொன்னாரரசனிடம்
ஆழிநெறியில்நின்ற வரசன்மனமகிழ்ந்து
சர்க்கரையெல்லோர்க்குஞ் சந்தோஷமாய்வழங்கி
முக்கியமாயெளியோர்களு முறையாகத்தானஞ்செய்தார்
பெண்மயிலாளப்போது பெரியோனுதவியினால்
ஆணென்றுசொல்லி யன்பாகத்தான்வளர்த்தாள்

பப்பரத்தியார்பள்ளியிலிருக்குதல்.

இந்தப்படி வளர்த்தா ளேழுவயதாகுமட்டும்
மைந்தனென்றுபள்ளிக்கு வைத்தாரே மன்னவரும்
பத்துவயதில் படித்தமுகிர்தபின்பு
உத்தசிப்புவித்தை யுறுதியுடனேபடித்து
ஆனகுதிரை யனேகநல்லயேற்றமெல்லாந்
தானேபடித்துத் தயவாயிருக்கையிலே

பப்பரத்தியாருக்கு எமன்பதியைமுடிசூட்டல்.

இந்தப்படியிருக்க விராசன்மனமகிழ்ந்து
மைந்தனுக்குப்பட்டமதுங் கட்டுமென்மன்னவனும்
கட்டினர்பட்டமதுங் கடவுளருளினால்
சிட்டருடன்மந்திரிமார் சேரவேசூழ்ந்திருக்க
நீதமுடன்ராச்சியத்தில் நெறிநடத்து நாளையிலே
போதப்புலிபசுவும் பொருந்தியொருதுறையில்
தண்ணீர்க்குடித்துத் தவனந்தீர்ப்பாரும்
மண்ணிலுள்ளமன்னவர்கள் மகிழ்ந்துமிகக்கப்பமிட
வாழ்ந்திருக்குநாளையிலே வல்லோனமைத்தபடி
வேந்தனிடகாலஞ்சென்று விண்ணேகிப்போனதல்பின்
செய்யுங்கருமவிதி செய்தானிளவரசன்
வையமுழுதாளு மன்னர்களுஞ்சூழ்ந்திருக்க
ஆதியருளாலே யானவிளவரசன்
நீதிவயது நிறையப்பதினாறும்
ஆகுமந்தநாளையிலே யானதொருமந்திரிமார்
வாகுடனேதானுரைப்பார் மன்னவனேவுற்றகப்பல்
ஊருக்குமப்பாலே உயர்ந்தமலையதுவும்
ஆறுகாதமாகு மந்தமலைதன்னுயரம்
செப்பமுள்ளமலையிற் சேர்ந்தரசன்கொலுவிருந்தார்
தப்பாமல்நீருமங்கே தானேகொலுவிருக்க
வாருமென்றுகூப்பிடவு மன்னவனும்போயினரே
வீருடனேபோயங்கே வீற்றிருக்குநாளையிலே

வசுராபதியரசன்வரலாறுகூறல்.

வசுரனூப்பட்டணத்தில் வாழுமரசனவன்
வசுரனென்னுமரசன் அவனுடைய தன்வலிமை
சேனையொருலட்சத் ததின்மேற்பதினாயிரமாம்

சேனைபெருந்தளங்கள் சேரவேபத்துலட்சம்
காலாட்படைகள் கணக்கிலடங்காதாம்
ஆலமெல்லாம்படைத்த வாதியருளாலே
அதிலேவொருயானைக் காயிரத்தலைகளுண்டாம்
துதிக்கைகளாயிரமாம் சொல்லுமந்தயானைதனைக்

மன்பதிக்கள்ளர்கள்வசுராபதியில்யானைதிருடப்போகுதல்.

கன்னமிடவேண்டுமென்று கனக்கவொருமுகமாய்
என்னியேபதினறுபே ரிலைசந்தமெமன்ராச்சியத்தார்.
வயதுபதினாறாய் வாலப்பிராயமுமாய்
தயவாயொருமுகமாய்த் தானுள்ளபேர்களுமாய்
சேரவொருமுகமாய்த் திரணமெங்கேதான்கூடி
பாரமுள்ளயானைதனைப் பாங்காய்க்களவுசெய்ய

அசுரராஜனைக்கள்ளர்காணுதல்.

மாவுத்தமார்வேடமாறி வந்தார்வசுராவில்
ஆவலுடன்வந்து மரசனிடந்தான்போனார்
போனவுடன்கண்டுபுகழ்பெரியராசனுந்தான்
ஆனைகட்டுமெனிதர்களே யாரென்றுதான்கேட்டான்
அப்போதுகள்ள ரன்புடனேதாமுரைப்பார்
இப்போதுநாங்க ளிருப்பதுவடதேசம்
பாரமுள்ளயானைகட்டும் பாங்கானமாவுத்தர்கள்
ஆரமுள்ளராச்சியத்தில் தோன்றியேயவ்விடத்தில்
தலைமுறையதாகத் தான்சேவுகமாயிருந்தோம்
நிலைமையாய்மன்னவனும் நிலங்கள்சிலதுவிட்டு
வெகுமானமுள்ளபொருள் வேண்டியதெலாங்கொடுத்துத்
தகுதானசேவுகத்திற் றாமிருந்தோமின்றளவும்
இப்போதுவுமிடத்தி லிருக்குமந்தயானைதனை
செப்பமாய்நாங்கள்கட்டச் சேர்ந்துவந்தோமும்மிடத்தில்
சிந்தைமகிழ்ந்துகொண்டு செப்பமுள்ளயானைதனக்கு
பந்தனமாய்ச்சேவுகமும் பார்க்கவேநீருணாத்தால்
சேவுகமாகவுமிருந்து திரமாகப்பார்த்திடுவோம்
பாவனையாகப் பட்சமுடனென்றுரைக்க
உரைத்ததொருகள்ளருக்கு முற்றதொருசேவுகந்தான்
விரைந்துநல்லதென்று வேந்தன்விடைகொடுத்தான்
சேர்ந்ததொருயானையிமேற் சேவுகமுந்தானெழுதி
ஏர்ந்ததொருகள்ளருக்கு வெண்ணிமுடியாது

பப்பாரத்தியாரம்மானை.

வெகுமானமற்றதுவும்வெகுசிர்மைதான்கொடுத்தான்
பருமானமாகப் பார்த்திருக்கும்வேளையிலே

அசுர்ராசன்மேல் வடதேசத்தரசன் படையெடுத்துவந்து யுத்தஞ்செய்யுதல்.

அந்தநாள்தன்னி லசுரனெனும்ராசன்மேல்
வந்தார்பெரும்படையாய் வடதேசராச்சியத்தார்
அசுரனெனுமரச னிப்போதுயேதுசெய்வான்
விசுவாசமந்திரியை வேண்டியேதானழைத்து
சேனைகளைக்கூட்டுமென்றான் தீரமுள்ளராசனுந்தான்
வானங்குவிந்ததுபோல் வந்துதேதன்படைகள்
பாயும்புரவிகள்தான் பதினாயிர[illegible]
வாயுவேகயானைகளும் வந்துமேநா[illegible]
எண்ணிற்கடங்காத காலாள்பெருஞ்சேனை
எண்ணத்துலையா தேட்டிலடங்காது
இந்தப்படைகளுட னெழுந்தானரசனுமே
வந்தவடராச்சியத்தார் வன்னலட்சஞ்சேனையுடன்
சுற்றிவளைத்தார்கள் சுழல்காற்றடித்ததுபோல்
வெற்றிமுரசடித்தார்வீரவடராச்சியத்தார்
அசுரனெனுமரச னவன்மேற்படையெழுப்பி
திசைகளதிர்ந்திடவே சேனையுத்தஞ்செய்ய லுற்றார்
எதிர்த்துசண்டைசெய்தார்க ளிருவரிடதன்படையும்
மதிப்பாய்பொருதிட்டார் வல்லோனருளாலே
அப்போதசுரராச னவனுடையசேனைத்தளம்
செப்பமுடன்களைத்துச் சோரமடிந்திடவே
ஆனைபரிசேனை யனேகமடிந்ததுவே
சேனைப்படைத்தலைவர் சிராய்மடிந்திடவே
அசுரராசன்முறிந்தோட வப்போதுசேனைத்தளம்
விசையாகவேசிதறி வெருத்தலைவிலோடிடவே

இமன்பதிக்கள்ளர் யானைக்கொண்டு போகுதல்.

ஓடுமந்தவேளையிலே யுற்றதொருகள்ளருந்தான்
நாடுமத்தயானைதனை நாட்டமுடனேதிருப்பி
கானமலைகடந்து காடுகளுந்தான்கடந்து
வேனிலனவெரிக்கும் வெட்டிவெளிகடந்து
கொண்டுயெமன்ராச்சியத்தில் கோலமுள்ளயானைதனை
சென்றுமலையருகே சேர்ந்தார்களப்போது

பார்த்தமுள்ள கள்ளர்கள்தான் பரிவாகயானைதனை
வேந்தனதுமுன்னே விட்டார்களப்போது

எமன்பதி - பப்பரத்தியரசர் - கள்ளரைக்கண்டு
வினவுதல்.

விட்டவுடன்யானைதனை வேந்தனவன்றான்பார்த்து
இட்டமுடனிந்தயானை யெங்கிருந்துவந்ததென்றார்
அப்போதுகள்ள ரரசனுக்கு யேதுசொல்வார்
செப்பமுள்ளதீவில் சென்றுகொண்டுவந்தோமென்றார்
வந்தோமென்றசொற்கேட்டார் வண்மையுள்ளராசனுந்தான்
சந்தோஷமாகித் தயவாகயேதுசெய்தார்
கஷ்டமுடன்கொண்டுவந்த கனமானகள்ளருக்குத்
திட்டமுடன்சேவகமுந் திரமாகத்தானெழுதி
தகுமானதிரவியமுஞ் சந்தோஷமாய்க்கொடுத்து
வெகுமானஞ்சிறமைகளும் வேண்டியதெல்லாமளித்து
சங்கையுள்ளராஜாவுந் தயவாகத்தானிருந்து
வங்கையுள்ளகள்ளர்தனை வகையாய்ப்பார்த்தேதுசொல்வார்

பப்பரத்தியரசர் கள்ளரைப் பரவி கேழ்க்குதல்.

ஆனைதனக்கேற்ற அழகானவான்பரியுந்
தானுமுள்ளசீர்மைகளித் தீண்டுப்பரியெங்குண்டோ
இந்தநல்லயானைக் கிசைந்தபரிபார்த்ததுண்டோ
சிந்தைமகிழச் செப்புவீரென்றுரைக்க
வந்தமைந்தகள்ளருந்தான் மனமகிழ்ந்தங்கேதுசொல்வார்
சந்தேகமேயாமே நாமப்பரியெங்குமில்லை
மக்கநகருதித்த வாழுமுகம்மதனார்
திக்கிலுள்ளக்காபிர்களை தீனிசுலாமாக்கிவைத்தோர்
காடுதன்னைக்கவைத்தோர் கனிந்தபழஞ்சொரியவைத்தோர்
நாடுதன்னைக்கவைத்தோர் நல்லமதிப்பவைத்தோர்
இந்தப்படியே பிருக்குமுகம்மதனார்
அந்தமுள்ளமருக ராணவலியாரும்
ஏறும்புரவியைப்போ லெப்பவிழிக்கண்டதில்லை
பாருலகநாயகன் படைத்தானதிசயமாய்
வாளுமவர்கரத்தில் வைத்திருக்கும்வாள்போலும்
நாளும்புரவியைய நாட்டமுடன்கண்டதில்லை

என்றுமிகக்கள்ள ரின்பமுடன்கூறுரைக்க
அன்றுயிளவரச ரன்புடனேதான்மகிழ்ந்து
இந்தப்புதுமைதனை யிப்போது நீங்கள்சொன்னீர்
அந்தப்புரவிதனை யன்புடனேகொண்டுவந்தால்
வேணமட்டும்திரவியமும் வெகுமதியாய்நான்தருவேன்
பூணாரமுள்ளதெல்லாம் பூட்டுவேனுங்களுக்கு
என்றரசர்சொல்ல வின்பமுடன்கள்ளரெல்லாம்
நன்றெனவேசொல்லி நாங்கள்கொண்டுவாரோமென்றார்
அப்போதுராஜ ரன்புடனேயேதுரைப்பார்
இப்போதுமதிளநக ரேகுவீர்நீங்களென்று
நயமாகராஜர்சொல்ல நாட்டமுடன்கள்ளர்சொல்வார்
வயணமுடன்போக வழிச்சிலவுக்கெங்களுக்கு
தந்துமனுப்புமென்னத் தயவுடனேயவ்வரசும்
சிந்தைமகிழ்ந்து செலவுரொக்கந்தான்கொடுத்தார்

{ கள்ளர்விடைபெற்றுமதிளத்தில் }
{ குதிரைகொண்டுவரப்போகுதல் }

வாங்கியந்தக்கள்ளருந்தான் மகிழ்ந்துநடந்தனரே
தாங்காமல்நடந்தார் தாண்டும்பரிகொண்டுவர
ஆறுமாதப்பயண மன்புடனேதானடந்து
காருலவுகின்றக் கானகமுந்தான்கடந்து
நடந்துமதிளநகரில் நாட்டமுடன்வந்தார்கள்
அடர்ந்துவந்தவூர்தனிலே யத்துல்லாதன்மகனார்
வலியமுகம்மதர்க்கு வாய்த்தமருமகனார்
அலியார்தலைமுழுகி யவரிருக்கும்நேரமதில்
சிந்தையுடன்போனகள்ளர் செப்பமுடனந்நேரம்
வந்துகண்டார்கள்ளர் மனமுமிகக்கலங்கி
கண்டாரலியெனவே கருத்தில்நினைந்தவர்கள்
நின்றவிடம்விட்டுமப்பால் நேரோநடந்தனர்கள்
வல்லோனுந்தவியினால் வான்புரவிதன்னையுந்தான்
நல்லகப்பர்கைப்பிடித்து நாடியந்தவீதிவந்தார்
வீதியதுதனிலே விண்புரவிபாதமது
அதியருளாலே யப்புவியிற்றங்காதாம்
இலப்புபுலப்பிடுமாம் செஞ்சிலம்புகொஞ்சிடுமாம்
நிலங்களதிர்ந்திடுமாம் நீள்புரவிகாற்றங்காதாம்

மன்னரவியேறும் வான்புரவிதானுமது
அன்னநடைசெய்திடுமோ மன்னகரின்வீதியெல்லாம்
இந்தநல்லகள்ளர்களு மிதப்புதுமையாமென்று
விந்தையுள்ளக்குதிரை வேடிக்கையைப்பார்த்து
ஒக்கத்திரிவார்க ளுற்றதொருவீதியெல்லாந்
தக்கப்புரவியைமந் தான்கப்பர்கொண்டுசென்று
தண்ணீரைக்காட்டித் தான்திரும்பிப்போகையிலே
கன்னமிடவந்ததொரு கள்ளர்களுமப்போது
இந்தப்புதுமையெல்லா மின்பமுடன்றான்பார்த்துச்
சிந்தைமகிழ்ந்தவர்கள் சென்றொருதலத்தில்
பொழுதும்போகமட்டும் போயிருந்தாரொருமுகமாய்த்
தொழுதபக்கீர்வேடங்கொண்டு துப்புரவாயங்கிருந்தார்
வந்தநல்லகப்பர் வான்புரவிகட்டிச்சென்றார்
அந்தநேரமசரொகுத்தி லவியாருங்காபாவில்
சென்றவுடன்வணங்கச் சேர்ந்தாரவியாரும்
அன்றவிறையவனை யன்புடனேதான்வணங்கக்
கப்பருமப்போது கர்த்தன்றனைவணங்கச்
சம்பிரமுடன்போனார் தனியோனுதவியினால்
அந்தநல்லசமயமதி லன்புடனேகள்ளர்கள்தான்
வந்தாரவியும் வணங்குந்தலமதிலே
பக்கீருவேடமது பாங்காகவேயெடுத்துத்
திக்கீருவோதியபின் தின்னுமோசிவனங்கள்
தாருமென்றுகேட்டிடவே தம்பிரான்றன்னருளால்
வாருப்பக்கீரொன்றுரைக்க வந்தார்வளவதனில்
நாயனருள்பெற்ற நல்லநபிமகளாரும்
ஆயனல்லரொட்டியுந்தான் தின்னுமென்றேகொடுத்தார்
வாங்கியந்தரொட்டிதன்னை வைத்தவருமேதுசொல்வார்
தாங்கவில்லையெங்கள்பசி தண்ணீருந்தாருமென்றார்
தண்ணீருந்தானும் தயவாயொருகூசாவில்
உண்ணுமென்றுசொல்லி யொருசிரங்கைநீர்கொடுத்தார்
அப்போதுகள்ள ரதிசயமாய்த்தான்பார்த்து
இப்போதுஎங்களுக்கு யிதுவோபோசிவனங்கள்
அந்நேரப்பீபியார்தா னகமகிழ்ந்தங்கேதுசொல்வார்
இந்நேரப்பிசியின்சொல்லி யிதுவோபசியாறுமென்று
ஒவ்வொருசடின்னுமெல்ல வுடையோனருளாலே
பசியாறினீர்கள் பதிலறுபெயருமப்போ
தின்றொசிவனங்கள் தின்னவளர்ந்ததப்போ
உண்டாரவரவர்க ளுடையோன்கிருபையினால்

தண்ணீர்குடித்துத் தவனமிளப்பாறி
அன்னவர்களெல்லோரு மலியாய்ப்படுத்திருந்தார்
நஞ்சுதின்றுநஞ்சுறுக்கும் நடுச்சாமவேளைதனில்
விஞ்சையுள்ளசொக்குப்பொடி விதமாகத்தானெடுத்து
வான்பரியைத்தானவிழ்க்க வந்தார்கள்கள்ளர்களுந்
தான்புரவிகட்டிநிற்குந் தலமிடத்தில்வந்துநின்று
சொக்குப்பொடியதனைத் தூவினராப்போது
மிக்கப்புரவியது மிகநலத்தைநோக்கிடுமாம்
அப்போகுதிரைகட்டு மானதொருசங்கிலியைத்
தப்பாமற்றானவிழ்த்தார் தானுமந்தக்கள்ளரெல்லாம்
அந்தமுள்ளசங்கிலியை யத்தனையுந்தானவிழ்த்துச்
சிந்தையுடன்வான்பரியைச் செங்கரத்திலேபிடித்து
அலியார்பிடித்துவெட்டு மானதொருஅல்பக்கர்
நலமானவாளுதன்னை நாட்டமுடனேயெடுத்து

கள்ளர்கள்ளமன்பதியிற்குதிரையைக்கொண்டுபோய்
இராசனைக்காணுதல்.

அவிழ்த்தபுரவியையு மந்தமுள்ளவாளுங்கொண்டு
செவித்துவெளிதனிலே சென்றார்களம்மானை
சென்றபுரவியதைச் சேரயிமன்ராச்சியத்தில்
அன்றிறையோனருளா லட்சணமேதானெருக்கி
தாயனுதவியினால் நல்லதொருவான்புரவி
மாயமாய்க்கொண்டு மகரியிலேசென்றார்கள்
செல்நந்தராஜர்முன்னே சேர்ந்திருக்குந்தன்கொலுவில்
கொண்டுபோய்விட்டார்கள் கூடிவந்தகள்ளரெல்லாம்
கொலுவிலிருந்தரசர் குதிரைதனைத்தான்பார்த்து
வலிவுடையவான்புரவி வந்தவகைசொல்லுமென்றார்
வந்தவிபரமெல்லாம் வகையுடனேகள்ளர்சொல்ல
சந்தோஷமானார்காண் தாலிகோவராஜன்மகன்
வெகுமானந்தான்கொடுத்தார் வேண்டுமென்றதிமையெல்லாம்
தகுமானதிரவியமுந் தான்கொடுத்தாரந்நேரம்
சேர்ந்ததொருபுரவியைத்தான் சீக்கிரமாய்க்கட்டியே
ஆர்ந்தசொல்லைத்தான்கேட் டன்புடனேகள்ளர்கள்தா,
சொன்னமொழிதப்பாமல் துரைராஜன்தானிருக்கும்
வன்னவரண்மனையின் வாசல்முன்னேகட்டினர்காண்

கட்டுப்புரவிமுன்னே காணமும்புல்லுவைக்கத்
தட்டமுடன்புல்லுகளைத் தீண்டாதொருநாளும்
தண்ணீருங்கொண்டுபோய்த் தான்முன்னேவைத்தாலும்
முன்னோனுதவியினால் முகமும்வைத்துபாராதாம்
பணிபாரம்ரொட்டியுமாம் பாங்குடனேவைத்தாலும்
தனியோனுதவியினாற் றான்திருப்பிப்பாராதாம்
இந்தப்படியா யிருக்குமந்தவேளையிலே
அந்தமுள்ளமதினக ரதிசயத்தைச்சொல்லுகிறேன்
புதுமையலியாரும் பெரியோன்றனைத்தொழுக
கதிபெருகுங்காபாவில் கருத்துடனேபோய்ச்சேர்ந்து
மூசாநபிதொழுத முன்னவன்றனேசாவில்
ஆசாரமாய்த்தொழுது மாறநபிதாள்பணிந்து
வந்தாரவருடைய மாளிகைக்குள்ளேயலியார்
மூத்தவவர்வளவின் முகத்திற்கெதிராக
வல்லமையாக வன்னமணிமண்டபத்தில்
நல்லதொருவான்புரவி நாட்டமுடன்கட்டிநிற்கும்
அனுமானித்துநிற்குமது மனிடனேயெத்தாளும்
இனியசத்தங்கேளாம லேக்கியலியாரும்
புரவிகட்டுமிடத்திற் போய்நின்றுபார்த்தவுடன்
அரியபுரவியையு மன்பானவாள்தனையும்
காணுமலேயலியார் கனக்கமனஞ்சலிப்பைப்
பூணியிலறையவனைப் போற்றிப்புகழ்ந்தனரே
அலியார்மிகவுஞ்சலித் தாறுதாள்மட்டாக
மெலிவாயவருடைய மாளிகைக்குள்ளேயிருந்து
எழாதானாகும்போ திறையோனடியிடத்தில்
தாழ்வேயலியார் தானுமேவந்தனரே
வந்தவலியாரும் வள்ளல்நபிதிருமுன்
சிந்தைகலங்கியங்கே செப்புவார்சேதிதனை
ஆலம்படைக்குமுன்னே யாதியருளிவிற்புருத்தி
ஞாலமதில்விளக்காய் நானிலத்தில்வந்துதித்த
எங்கள்நபியாரே யெல்லவர்க்குந்நாயகமே
மங்காதசந்திரன்போல் மாநிலத்தில்வந்தவரே
ஆதியருள்பெற்றிருக்கு மப்துல்லாபுத்திரரே
நீதியுள்ளநாயகமே நிஜவார்த்தைகேட்டருள்வீர்
ஆயபெரியோ னருள்நபியேகேளுமினித்
தூயபுரவியையுந் தப்பற்றவாள்தனையும்

கட்டிநிற்குமிடத்தில் காலுமற்போய்விட்டது
திட்டமுடனுரைத்தேன் திருநபியேநீர்கேளும்
ஆதியிறையோன்றனக்கு யான்செய்தபாவமிதோ
நீதிமுறைகள் நிறைதப்பிப்போனதுண்டோ
என்றலியாருரைக்க இறையோன்நபிசொல்வார்
நன்றியிறையோனது நமக்குவருஞ்சொல்வேனென்றார்
உரைத்தமொழியதனை யுடையோனுந்தானறிந்து
விரைந்துசிபுரீயிலே மேலோனுங்கூவிசொல்வான்
அந்தமுள்ளமெய்யேருமு கமதுயிறசூல்நபிக்கி
சத்தன்சலாமுரைத்து யிப்போதுசொல்லுமென
ஆனபுரவியையுமம்பாலவாள்தன்னையுந்
தானும்யெமன்ராச்சியத்திற் சதிராயிருக்குதென்று
அலியார்தனக்கிசைந்த வாரணங்கிருக்குதென்று
வலியநபிக்கிசொல்லி வாருமென்றுனிறையவனும்
எகனுஞ்சொன்னவுடனெழுந்திருந்தார்சிபுரயிலும்
தாகமதாகப்புவியிற் றுனிரங்கிவந்தனரே
ஆதியருட்படிநபிக்கி யன்பாய்ச்சலாமுரைத்துச்
சோதியருட்பெற்றநல்லத் தூயோனிறசூலே
துப்புறவுவான்புரவி துல்பக்குருவாளதுவுந்
தப்பியதுபோச்சுதென்று தாலீசலிக்கமிவண்டாங்காண
வலியவெயமன்ராச்சியத்தில் வாளரசனரண்மனைக்குள்
அலியார்மணமுடிக்க வானதொருபெண்மயிலாள்
இருப்பதாலங்கே யிருக்குதுதான்வாள்புரவி
பொருப்பதுவுஞ்சொல்லிப் போயினர்வானவரும்
நன்றியுள்ளவார்த்தை நபிமாயங்கேட்டு
அன்றுநபியிறசூலல்லாதனைப்புகழ்ந்து
வானவருமப்போ வரைந்தவுரைப்படியாய்த்
தானேயலியார்க்குத் தானுரைத்தாரம்மானே
அப்போதலியாரு மன்புடனேயேதுசொல்வார்
செப்பாதிறையோனருட் டந்துதாரானவரோ
ஒப்புடையகன்புதல்வி பூண்மையுடனேயிருக்க
இப்புமைதனிலேயொருபெண் ணிப்போதுகொள்வேனோ
என்றுசொன்னவுடனே யிறசூல்நபியேதுரைப்பார்
நன்றியுள்ளவலியே நான்சொல்லுவதைக்கேளும்
துய்யபுகழுடையோன் சொன்னபடிதப்பாது
ஐயமில்லையென்று மலிதமக்குத்தாமுரைத்து

போத்துயிமன்ராச்சியத்திற் புரவியும்வாளதுவும்
பார்த்தவரச்சொல்லி பயகாப்பரவிக்குரைந்தார்
எல்லைப்படைத்த யிரணமிகப்பவனே
துன்மைக்குபிரைவெட்டித் தீன்வளரச்செய்தவனென்
றப்போதலியா ராலுயிதாள்பணிந்து
செப்பமுடனேபுரவி தேடுதற்கெழுந்திருந்தார்
கையிற்கெதையெடுத்துக் கடுகவெழுந்திருக்கையிலே
ஐயவிபுருஷிம்நயி தொழுதலுக்தாருச்சு
அந்தநேரந்தொழுது மாதயிடந்தனிலேதுவா
சிந்தைமிதமகிழ்ந்து தீர்க்கமாய்கேட்கலுற்றார்
வாசியுடன்வாளும் வரவிட்டவல்லவனே
தாசியிலேபறக்குந் தல்துலேயும்பார்த்துவர
உன்னுதவிவேண்டுமென் றுகர்ந்தலியார்போற்றிசெய்து
மன்னர்நபியிடத்தில் வந்துவிடைகேட்டார்
கேட்டவுடனேநயியும் கிருபையுடன்பார்த்துரைப்பார்
வாட்டமிலசமலிப்போ வாளுப்புரவியையும்
சிந்தைதளரும்பற் சென்றுபார்த்துவாருமென்றார்
அந்தவுரைகேட் டலியாருமிகவணங்க
அன்பாய்நபியிறசூ லன்றுவிடைகொடுத்தார்
இன்பப்புரவிதேட வெழுந்தாரலியாரும்

அலியார்குதிரையைத்தேடி எமன்பதிவருதல்.

நடந்தாராமந்நேரம் நாயனுதவியினால்
அடர்ந்தயெமன்ராச்சியத்தி லசரொகுத்திற்போயினரே
போனவுடனலியார் பெரியோன்றனைவணங்கத்
தானும்மலையருகே தானின்றவாங்குசொன்னார்
வாக்குசொன்னபோதே வான்மலையுந்தானசையும்
பாங்காய்மலையிருந்த பப்பரத்தியார்தளமும்
வானிடியைக்கண்ட மக்கருயதுபோல்நடுங்கித்
தானேவிருந்து தயங்கிமயங்கினரே
ஞானறுதினா யநேசமெல்லாஞ்செத்திடவே
தானேடையந்தரசன் தான்மயங்கிவிழுந்தனரே
கெவியடைத்துக்கண்கள்ரொண்டுஞ் செருத்தமொழி
புவிமிக்கிழுந்தாரசன் பிணம்போலேதான்கிடந்தான்
பயக்கர்நெளித்தாரசன் மந்திரிமார்க்கேதுரைப்பான்
நயக்குப்படிசத்தமிட்ட தாருலகெல்லாமதிர
வானிடிபோதேநெவா மத்துமுள்ளதின்தானோ
தானிலத்திற்சத்தமிது நாமறியோமப்போதும்

அரசனிவைகேட்க வதிலொருவன்றானுரைப்பான்
தெரியாதயாரோ இருநகரில்வந்தவர்கள்
மக்கமதினையிருந்து வந்தவனுக்காணுமிவன்
மிக்கயிறையவனை மிகவேவணங்குதற்கு
சத்தமிடவேண்டுமோம் தனிமார்க்கமப்படியாம்
நித்தமஞ்சுவேளை நின்றுமங்கேகூப்பிடுவார்
மேற்குமுகமாக விழுந்துமங்குதான்கிடந்து
தாக்குடையநாயன் றன்னைவணங்குவாரெனவே
அந்தமொழிகேட்டரச னவனுமங்கேயேதுசொல்வான்
இந்தநம்மலூர்தனிலே யிவர்வரவுங்காரியமோ
குன்றுமலையுருட்டிக் கொல்லுமெனவேயுரைத்தான்
துண்டுமலையைப்போ தணிந்துமவர்மேலுருட்ட
யிரண்டுவருங்கர்களெல்லாம் பெரியோனுதவியினால்
இரண்டடியார்மேலே சேரவிழுகாதாம்
பார்த்தரசனுந்தான் பதறித்திகைத்துநின்றான்
காற்றும்பிசலதுபோலக் கடிகிமலைவிட்டிறங்கி
வந்தானரசனவன் வல்லியார்முன்பாக
அந்தமுடனவனு மார்ப்பதித்துநிற்கயிலே
அலியார்தொழுதிருக்கு மந்தயிடந்தனிலே
வலியவரசனுந்தான் வல்லமையாய்வார்த்தைசொல்வான்
அந்நேரஞ்சுசிறி லலியாருந்தான்விழுவார்
மன்னவன்றன்சேனையெல்லாம் வந்தவனைத்துநிற்க
வணக்கமுகிந்தலியார் வல்லவனைத்தான்புகழ்ந்தார்
இணக்கமுடனிருந்தார் யிறையோனருளாலே
கண்டரசனுந்தான் கைநீட்டிப்போராட
சென்றுவருகையிலே சிறுமலியேதுசொல்வார்
என்னைத்தொடவேண்டாம் இளமையிலேஇப்போது
மன்னனுக்கேராது மடமையிலேயிச்செயல்தான்
என்றலியார்சொன்னவுட னிளவரசன்றான்கேட்டு
அன்றரசன்மக னார்ப்பதித்துக்கண்சிவந்து
ஏன்னடாசொன்னா யிராசமொல்லாய்பார்த்துநிற்கப்
பெண்ணென்றுசொன்னப் பொய்யனேவுன்னுக்கறுப்பேன்
என்றரசன்மகனு மிருகண்ணுந்தான்சிவந்து
சென்றுவருகையிலே சிறும்புலியலிபார்த்து
கையிலிருந்தொரு கெதையாலரைதள்ளிவிட்டார்
மெய்யிலுடையாடை மேலோதக்கிப்போனதுவே

பப்பரத்தியரசன் அலியாரால் பெண்ணாகி யரசன்மனையி லிருக்குதல்.

ஆண்சொரூபமாறி யருவைமயிலாளாகி
பெண்சொரூபமாகப் பெற்றரசனின்றதின்பின்
நிலைகுலைந்துமெய்மறந்து நீலவிழிகளைநோக்கி
தலைதிருப்பிப்பாராமல் தன்மனைக்குள்ளேகினரே
அப்போதலியாரு மல்லாதனைநினைந்து
செப்பமுடன்மதினா சேர்ந்தார்மகரிபுலே

அலியார் மதினாவைச்சேர்ந்து நபியைக்காணுதல்.

சேர்ந்துநபியுடைய சீர்பாதந்தெண்டனிட்டு
சார்ந்தயெமன்ராச்சியத்திற் றானடந்தசேதிதனைப்
படிப்படியேசொல்லப் பயகாம்பர்தான்மகிழ்ந்து
வடிப்பமுகம்மதரும் வல்லவனைத்தான்புகழ்ந்து
நாயன்றனைவணங்க நல்லதொருமோதினைத்
தூயதொருமகரிபக்குச் சொல்லுமென்றார்வாங்குதன்னை
அப்போதுமோதி னகமகிழ்ந்தொதுவெடுத்துச்
செப்பமுடன்வாங்குதனைத் திறமாகச்சொன்னாரே
வாங்குசொன்னபோதே வல்லநபியசபாக்கள்
தாங்காமலேயொதுவுந் தான்செய்தார்யார்களுடன்
தக்கமகரிபுவுந்தான் றொழுதார்யாவர்களும்
மிக்கதொருயேசாவு மேலோன்றனைவணங்கி
நாலியார்களசாபிகளும் நன்னபியின்றாள்பணிந்து
கோலமனைதனக்குத் தொள்கையாத்தானடந்தார்
அவரவர்கடன்மனையி லன்புடனேபோயிருக்க
தவமாம்யெமன்ராச்சியத்திற் றானடக்குஞ்சேதிசொல்வாம்
ஏகனுதவியினா லிராசனும்பெண்ணாயிருக்க
வாகாயெமராச்சியத்தில் வந்திருக்கும்வான்புரவி
தண்ணீரொசிவனைங்கள் தானுமதுதீண்டாதாம்
மன்னனுதவியினால் வாடாமலேயிருக்கும்
சங்கையுள்ளபுரவிக்குத் தண்ணீரைக்காட்டுதற்கு
அங்குள்ளோரைப்பார்த் தருவையருத்தானுரைத்தார்
அத்தலத்திலுள்ள வனைவர்களும்வான்பரியைப்
பத்தியுடனடத்திப் பரிவாய்த்தண்ணீர்க்காட்டி
வாரோமென்றுசொல்லி மாண்டாரனைவோர்கள்

தாரணியின்மன்னவர்கள் தானுதவந்தவனைக்
கடித்துவுதறிவிடுங் கற்றோனருளாலே
பிடிக்கவென்றுவந்தனைப் பின்காலாலேயுதைக்கும்
வந்துபிடித்தரசர் மாள்வார்களப்போது
இந்தவிதமோராண் டிருந்ததுவான்புரவி
ஒருவருக்குமட்டு முகத்திருக்குதானையிலே

{ தென்றேசம்சூரராசன் மதினநகர்
மேற்படையெடுத்துவருதல். }

திருமதினவில்நடந்த சேதிதனைச்சொல்லுகிறேன்
தெற்கேயொருராச்சியத்தில் திரள்படையோடேயெழுந்து
தக்கப்புகழுடைய தானுமொருவாளரசன்
சூரனென்னுமரசன் தோன்றிப்படைகளுடன்
சேரவுமேவந்து திரண்டுபடைசேர்த்துக்
கனத்தப்படையுடனே கடல்போலேசூழ்ந்துவந்து
சினந்துமதினநகரஞ் சேரவேதான்வளைந்தார்
படைகள்வந்துவளைந்தவிதம் பயகாம்பர்தான்பார்த்து
உடையோனைத்தானினைந்து வுள்ளமிகச்சலித்தார்

(நபிக்கிச்சிபுரியில் தூதுசொல்லல்)

அப்போதுநாயகன் பாய்ச்சிபுரியிலே
செப்பமுடனழைத்துச் செப்புவானப்போது
காவலுடன்சேனை கனத்தபெரும்படையாய்த்
தாவிமதினநகர் தான்வந்துசூழ்ந்தார்கள்
இந்தப்படைதனக்கு யென்றேழர்முகம்மதனார்
எந்தவிதம்பொருவோமென்று யெண்ணிமனஞ்சலித்தார்
நல்லதுநீர்வானவரே நபியிடத்தினீர்போய்ச்
சொல்லிவருவீரெனச்சொல்லவிறையவனும்
அந்தநல்லசொற்கேட் டன்பாய்ச்சிபுறாயிலும்
வந்தார்மதினநகர் வள்ளல்முகம்மதர்க்கு
இறையோன்சலாஞ்சொல்லி யெடுத்துரைப்பார்நன்னபிக்கி
கனாசேர்க்குநன்னபியே கத்தனுமக்குச்சொன்னான்
வானங்குவிந்ததுபோல் வந்தபெரும்படையைத்
தானேநீர்கண்டு தான்சலிக்கவேண்டாமென்று
எதிர்ப்பாளையம்வகுத்து யெதிராளிதன்படையைக்
கதிப்பாய்ப்பொருதிடவே கத்தனுரைத்தான்காண்
வல்லோன்சிபுறாயிலும் முகம்மதரிடஞ்சொல்லி

நல்லசொர்க்கலோகம் நாடியேசென்றதன்பின்
அப்போதுநபியிறசூ லன்பாகமோதினிடஞ்
செப்பினார்மதினாநகர் சேர்ந்ததொருவீதியெல்லாம்
ஒக்கப்பறைபோட் டொருநொடியில்வாருமென்றார்
ஹக்கனபியிறசூ லன்பானசொற்படியே
பட்டணங்கடோறும் பறைபோட்டொருநொடிக்குள்
திட்டமுடன்நபிமுன் சென்றார்காணம்மானை
அறைந்தவிசேஷக்கேட்டு யார்களசகாபிகளும்
நிறைநிறையாச்சூழ்ந்து நிண்ணயமாயெல்லோரும்
வந்தார்நபிமுகம் வானங்குவிந்ததுபோல்
அந்தரங்கவெளியிலே யாலநபிதாள்பணிந்து
ஏதுவிடையெங்களுக்கு யேகன்திருநபியே
நீதியுடனருளுமென்றார் நிச்சயமாய்நபியுரைப்பார்
அலியார்வரவுமில்லை யவர்புரவிவாளுமில்லை
சலியாமலேபடையைத் தானேபொருதவென்று
கப்பர்தனைக்கேட்கக் கப்பரப்போதேதுசொல்வார்
சப்பிரமுள்ளநன்னபியே சட்டமதாயானுரைப்பேன்
அலியார்சலிப்பாகி யவர்புரவியில்லாமல்
நலிவாகயிவ்விடத்தில் நாட்டமதாயிருப்பரென்று
அப்போதுகப்பருட னுலநபிதாமுரைப்பார்
இப்போதலிபுலிக்கு யிணக்கமுடனேசொல்லி
அழைத்துவாருமென்று ராலநபியிறசூல்
விழைவுடனேகப்பர் வெற்றிபலிதாள்பணிந்து
வாட்டமாயிருப்பதென்ன வல்லோனலிபுலியே
கூட்டிவரச்சொன்னார் ருதாயிறசூல்நபியுமெனச்
சொன்னபொழுதே அங்கப்புலியலியார்
மன்னிறையோனைப்போற்றி மனமகிழ்ந்துதானடந்தார்
அலியாரெழுந்துசென் றாலநபிதாள்பணிந்து
மெலியாமலேஇறையோன் வெற்றிபெற்றநாயகமே
ஏதுவிடையெனக்கு மென்றுமலியார்கேட்க
ஆதியந்தமில்லானருள்பெருகும்நபியுரைப்பார்
அர்சிலபுலியலியே யரசர்களும்படைகூட்டிப்
மிர்சமுடன்வந்தார்கள் பெரியோன்புலியேவென்று

(நபிக்கிச்சிபுரியில்வந்த தூதுசொல்லல்)

அலியார்க்குநபியுரைக்க வன்புடையநாயனுந்தான்
வலியச்சிபுரியிலே வாருடனேகூவிசொல்வான்

என்னுடையதோழர் இறசூல்முகம்மதர்க்குச்
சொன்னேன்சலாமென்று சூழ்படைக்கியஞ்சாமல்
சிந்தைமிகமகிழ்ந்து சீக்கிரத்திற்சென்றுநின்று
விந்தையுடன்காபர்படை வெல்லாதெனைநோக்கி
ஆலநபிகரத்தா லள்ளியொருபிடிமண்ணை
சீலமுடனெறியச் செப்புப்பகைவர்கள்மேல்
பட்டுமடிவார்கள் பாழுங்குபிரர்படை
தட்டியாய்ம[illegible]த்தவர்போல் நாநிலத்தில்நின்றவர்கள்
ஆலநபியினி லவர்வருவாரென்றுசொல்லிச்
சீலமுடனபிக்குத் திரள்படைகள்வேண்டுமென்றால்
வானவர்கள்கோடி வல்லமையாய்வருவாரென்றுத்
தானேபடைபொருதச்சொல்லித் தான்திரும்பிவாருமென்றுன்
வாருமென்றுசொல்லி வல்லோனுரைத்திடவே
ஊருந்தவறுமில்லா னுரைத்தவகைப்படியே
நன்றெனச்சிபுரியிலும் நாட்டமுடன்வந்திறங்கி
அன்றுதிருநபிமு னன்பாய்ச்சலாமுரைத்துக்
சுத்தன்சலாமுரைத்துக் கவலுற்றான்வகைப்படியே
உற்றசிபுரியினு முரைத்துமகன்றவுடன்
ஆண்டபெரியோ னருளுதவியானதெல்லாத்
தாண்டும்பரியார்களுடன் சூனுரைத்தாரப்பமானே
உரைத்தநபியிறசூ லண்மையுடனேயெழுந்து
விரைந்தசமர்வெளியில்வேதநபிதானடந்தார்

{ மதினநகர் நபியிறசூல் காபர்மேற் படையெடுத்துப் போகுதல். }

அந்தநல்லவேளையிலே யார்களுமசாபிகளும்
சிந்தைகலங்காமல் சீக்கிரமாய்ப்படையெழுந்தார்
அப்போதுகாபர்படை யலைகடற்போலெழுந்து
தப்பாமலேயெதிர்த்துத் தான்வெளியேவந்ததுமே
வடகடலுந்தென்கடலு மற்றுமுள்ளகீழ்க்கடலுந்
திடமுடனேமேற்கடலுந் திரண்டுஎதிர்த்தாப்போல்
ஆலநபிபடையை யப்போதுதான்வளைந்தார்
சீலமுடனேதான் சேர்ந்தொருதன்படையை
வந்தபடைதனக்கு வகைசெய்யமாட்டாமல்
சிந்தைகலங்கித் திரளாகநின்றிடவே
வல்லோநபியிறசூல் வானவர்தான்சொன்னபடி
நல்லதொருமண்ணையள்ளி நாடிப்படைதனிலே

சதிந்தார்நபிசரத்தா லெங்கும்போய்த்தான்விழவே
வருந்தியொருபிடிமண் மலைபோலேதானாகி

{ காபர்படைமடிந்துத்தப்பியபேர்
நீனாகித்தங்கள்பதிசேர்தல். }

வானவர்கோன்சொன்னபடி மடிந்ததுகாபர்படை
தானேமடிந்ததுபோய்த் தானயிஞ்சிநின்றவர்கள்
அஞ்சிப்பயந்தவர்களாலநபிதாள்பணிந்து
கொஞ்சிநபிகலிமாக் கூறினரெல்லோரும்
கலிமாவுஞ்சொன்னதின்பின் கத்தனுதவியினால்
சலியாமற்றன்னகர்க்குத் தானேகிப்போனபின்பு
மன்னன்நபிபிறசூல் மற்றுநாலியார்களுடன்
நன்மையசபாக்களுடன் நன்மதினமாநகரில்
சிந்தைமகிழ்ந்திருந்தார் சேனையெல்லோரும்
முந்தவுதித்த முகம்மதிறசூல்நபியும்
சல்லாபமனமகிழ்ந்துச் சாற்றுவார்யார்களுடன்
எல்லோருந்தன்மனைக்கி யேகுங்கோள்நீங்களென்று
சொன்னவுடன்யார்களும் சூழ்ந்தவசாபிகளும்
அந்நேரந்தன்னி லருட்படியேயெல்லோரும்
சங்கையதாகத் தானேயவரவர்கள்
திங்கள்நபிதான்பணித்துச் சென்றார்காணம்மானே
போனாரதின்பிறகு புதியோன்நபியிறசூல்
தானுமணிமாளிகைக்குட் டாமகிழ்ந்துபோயினரே

(சிபுரியில் ஆதுவந்து நபிக்குச்சொல்லுதல்.)

அப்போதுநாய னன்பாய்ச்சிபுரியிலே
செப்புமுடனழைத்துச் செப்புவானோர்வசனம்
ஆலநபிதமக்கு மன்புடனேயெந்தன்சலாஞ்
சில்முடனுரைத்துச் செப்புவீர்ச்சேதிதனை
அலியார்குதிரையது மன்னெனமன்ராச்சியத்தில்
நயியாமற்போனதைத்தான் நாட்டமுடன்தேடதற்கு
அலியாருந்தான்போக வாண்டவனுலாத்தேதினென்று
வலியமுகம்மதுக்கு வகையுடனேசொல்லுமென்றான்
என்றுரைக்கநாட னிமையோருமன்னவிறங்கி
அன்றுநபியருகே யன்பாய்ச்சலாமுரைத்து
நாயன்சலாமுரைத்து நாட்டமுடனேதுரைப்பார்
தூயோனுரைத்தபடிச் சொல்லியங்கேதான்மறைந்தார்

அப்போதுநபியிறசூ லலியார்தனையழைத்துச்
செப்பமுள்ளவரானோர்சொன்ன சேதியுரைப்படியே
குதிலார்தனைத்தேடிக் கொண்டுவரப்போவீரென்றார்
எதுவேஷங்கொண் டிப்போதுபோவேனென்றார்

சிபுரியில் வளையல்கொண்டுவந்து கொடுத்தல்.

அப்போதிறையவனு மன்பாகச்சிபுரியிலே
செப்பமுடனிரங்கிச் சிங்கப்பிலியலிக்கி
வளருமெமராச்சியத்தில் வான்புரவிதேடுதற்கு
வளையற்செட்டிவேஷம் வயணமாய்த்தானெடுக்க
பாசமுள்ளசொர்க்கமத்திற் பாங்கானவளையல்விற்கும்
வேஷமெல்லாங்கொண்டு விதமாகமண்ணிறங்கி
பயகாம்பர்திருச்சமுகம் பாங்காகவையுமென்றான்
வயணமாய்வல்லோனுரைக்க வந்தார்சிபுரியிலும்
வந்தார்நபியிடத்தில் வைத்தகன்றார்வேஷமெல்லாஞ்
சுந்தரஞ்சேர்வேஷமெல்லாந் தூயோனபிதானெடுத்து

அலியார் வளையல்செட்டி வேடம்பூணுதல்.

அப்போதலியாரையு மன்புடனேவேஷமெல்லாத்
தப்பாமற்போடுமென்றார் தானலியாரந்நேரம்
நெத்தியிலேநாமமிட்டு நேயவுருமால்கட்டி
பத்தியுடனேவளையல் பாங்காகத்தோளிலிட்டு
கம்பளியுமேற்போட்டுக் கையிற்றடியெடுத்து
நம்பிநபிதாள்பணிந்து நாடிவிடைதாருமென்றார்
அப்போநபியிறசூ லகமகிழ்ந்துதானுரைப்பார்
செப்பமுடனேயலியே சீக்கிரம்போய்வாருமென்றார்
சங்கையலிவிடைவாங்கித் தனியோனுதவியினால்
துங்கப்புலியலியுந் தூயனுகர்தொழுது

அலியார்வளையற்செட்டியாக யெமன்பதிக்குப்போகுதல்.

செப்பும்நபிதாள்பணிந்து சிறப்பாய்வெளியில்வந்து
தப்பாமலேபா[illegible]ரோக்கிநடந்தனரே
நடந்துயெமன்ரா[illegible]யத்தில் நாட்டமுடனசரொருத்தில்
அடர்ந்துபுகழலியா[illegible] ரன்பாகப்போய்ச்சேர்ந்தார்
போனவிடத்தித் [illegible]கழ்பெரியராஜனிடம்
ஆனதொருசிங்காரத் தோப்புரணியருகே
வளையற்கடைவைத்தார் வல்லவலிபுலியார்
பனையதொருதோப்பைப் பார்க்கவந்தசேவுகர்கள்

வந்தவர்களேதுசொல்வார் வாருடையசெட்டியாரே
இந்தநல்லதோப்பி லெவர்வளையல்கொள்வார்கள்
பட்டணத்துவீதியிலே பாங்காக்கடைவைத்தால்
திட்டமுடன்கொள்வரென்று சேவுகருந்தாமுரைத்தார்
அப்பொதலிவாரு மவர்களுடனேதுசொல்வார்
தப்பாமலென்வளையல் தாரணியோர்கொள்ளார்கள்
தாயனருட்பெருகு நல்லதொருயென்வளையல்
ஆய்ந்தநல்லதோப்பி லருகூரணியருகில்
கொண்டுகடைவைப்பேன்காண் கோலமுள்ளராஜன்மகள்
தண்டிகையில்லாமற் றான்வந்துகொள்வதல்லால்
மற்றொருவர்கொள்வதில்லை மன்னன்சேவுகரேயென்று
பத்தியுள்ளசெட்டிசொல்ல பட்டணம்போய்ச்சேவுகரும்
அரசன்மகள்சமுகம்மகள் அன்பாகவேயுரைக்கப்
பிரசமுடன்ராஜன்மகள் பெருமையாய்த்தானெழுந்து
வீருடனேதாதியர்க்கு விதிதமாயேதுசொல்வார்
ஆரோதெரியாது வன்புடனேதோப்புதனில்
வளையற்கடைகள் வைத்திருக்குஞ்சேதிதனை
பளையதொருசேவுகன்றான் பாங்காகவந்துரைத்தான்
ஆகையினாலே யன்புடனேநீங்கள்சென்று
வாகானசெட்டியையும் வரவழைத்துவாருமென்றார்
அப்போதுசென்றார்க ளன்புடனேதாதியர்கள்
தப்பாமலேநடந்தார் தானுமந்தத்தோப்புதனில்
சென்றொருமனதாய் சேரவேதாதியர்கள்
கண்டார்வளையல்தனைக் கனகமுற்றதாதியர்கள்
ஏதுகாணிவ்வளைய லிப்புவியிற்செட்டியாரே
சோதியொளிவுடைய துய்யதொருதன்வளையல்
விலைகள்சொல்லுஞ்செட்டியென்ன விதமுடனேசெட்டிசொல்
மலைகளதுபோலே மாடதங்கத்தான்குவிந்தால் [வார்
தருவேனொருவளையலென்று தானுரைத்தார்செட்டியாரும்
பருவமுள்ளதாதியர்கள் பதில்வார்த்தையேதுசொல்வார்
சொன்னவிலைதருவோம் துய்யதொருசெட்டியாரே
மன்னரசியரண்மனைக்குள் வாருமென்றுதானழைத்தார்
நல்லதெனவளையல்செட்டி நாட்டமுடனேநடந்து
வல்லரசியாரண்மனைக்குள் வந்தார்வளையல்விற்க
அலியார்செட்டிவரவுகண் டானதொருதன்புவி
வலியவனுமானித்து வாய்விட்டேகூவிமோம்
அப்போதரசன்மக ளானதாதியைப்பார்த்து

செப்புவாரப்போது செம்மையுள்ளதன்புரவி
வந்துவொருவருமேய் வாய்விட்டுக்கூவவில்லை
இந்தவளையலிற்கு மிப்பெரியசெட்டியாரைக்
கண்டனுமானித்தக் காரணந்தானேதெனவே
என்றுசொலவிவ்வியாரு மெடுத்துரைப்பாரந்நேரம்
அரசன்கண்மணிவிளக்கா யானமெத்தருக்கென்னமோ
புரவியனுபானித்தப் புதுமைதனைச்சொல்லுகிறேன்
மதிநகராமதில் முகப்பதற்குவமருகர்
சதியிலலியாருந் தாமேநம்புரிப்பித
அவர்களரண்மனையி லவ்விடுடனே பாய்ந்துசென்று
கணமுடனல்லக் கனகவளைவிற்பதன்றி
அப்போபுரவியதிந்நிருக்குமெல்லமையுந்
தப்பாமலேயதற்குத் தன்னன்றுசொல்லமேவன
ஆனதினுலென்ன யறிந்தனுமானிக்குமது
தானமுடனிறையோன் றன்னருளாலென்றுரைத்தார்
அப்போதரசியரு மதிசயமாய்த்தான்கேட்டு
இப்போதுசெட்டியாரே யென்னவிலைவளையலென்றார்
என்றுசொன்னபோதே யிறசூல்மருமகனார்
அன்றலியாரு மதற்குவிலைசொல்லிடுவார்
மலைகளதுபோலே மாடதங்கந் தான்குவித்தார்
சிலைநுதலின்விழியாரே சேர்த்துவளைகொடுப்போமென்றார்
நல்லதென்றுசொல்லி நங்கையருந்தானெழுந்து
கல்லடமாய்த்தங்க மலைபோலேதான்குவித்தார்
அந்நேரந்தானே யலியென்னுஞ்செட்டியாரும்
வன்னமுடன்வளையத்தன்னை வகைவகையாய்த்தான்பார்த்து

(அலியார்பப்பாத்தியாருக்கு வளையல்தொடுத்தல்)

கோவராசன்பெற்றக் கோன்மன்னர்கன்னியனாய்
பாவனைபாய்க்கைப்பிடித்துப் பாங்குடனேநெட்டையிட்டு
கையைப்பிடித்திருந்துக் கருணையுடன்றன்முறுக்கிப்
வையமெல்லாந்தாமறிய வளையத்தொடுத்திடுவார்
வளையத்தொடுக்கும்போது வல்லவனுந்தானுரைப்பான்
இளமயிலாள்கொடுத்ததங்க மெத்தனவிலேயுமக்கு
கொடுத்தபரியமெல்லாம் குதாவுலாத்தானப்போது
தொடுத்தவளையமெல்லாந் தோகையர்க்கிருமதுவாம்
என்றுரைக்கதாயலியிடமுள்ளசத்தியது
அன்றலியார்செவியி லன்புடனேகேட்டிடவே

மன்னரலியாரு மனமகிழ்ந்துமப்போது
என்னுடையநாயகனே எனக்குதவிசெய்வையென்று
வரிசைப்புலிபலியு மன்னன்மகள்தனுடனே
பிரியமுடன்சொல்வார் புரவிக்குநீர்காட்டி
வாரேனென்றுசொல்ல மங்கையருமேதுசொல்வார்
பாரிலுள்ளவரசர் பாங்காகவந்துவந்து
பிடித்துநீர்காட்டவென்று பேசிவந்தமன்னர்களை
கடித்துவெழுபதுபேரைக் கண்காணக்கொன்றதுகாண்
இந்தப்புரவிதன்னை இப்போதுநீரவிழ்க்க
சிந்தைமகிழ்ந்துரைத்தீர் சேதியல்லசெட்டியாரே
உன்னையதுகடித்து வதறிவிப்பாராமல்
என்னைப்படைத்த யிறைவனுந்தான்பொறுக்கான்
என்றுரைத்தராஜகன்னிகை கேளமயலியேதுசொல்வார்
கொன்றுபோட்டாலுமென்னைக் குற்றமில்லையுந்தனுக்கு
ஆதியருளாலே யவிழ்த்துமங்கேநீர்காட்டி
நீதியுடன்வருவேன் நில்லுமிங்கேகன்னியேநீர்
கொடுத்ததிரவியம்பான் கூறும்வளையலுந்தான்
எடுத்துநான்போகவில்லை யிருக்கட்டுமிவ்விடத்தில்
என்றுபுரவிதன்னை யின்பமுடன்றனவிழ்த்து
அன்றிறையோனைப்புகழ்ந் தன்புடனேயேறினரே
எதிருரவிபுலியு மிறையோனருளாலே
பாரமுடனேயேறிப் பாங்காய்வெளியில்வந்தார்
நடத்திப்புரவிவிட்டு நாட்டமுடன்காபர்களை
அடர்த்துகலிமாவை யல்லவருஞ்சொல்லுமென்று
சத்தமொன்றுபோட்டார் தார்வேந்தரலிபுலியார்
மெத்தவெகுதுலவில் விண்ணிடிந்தவாறதுபோல்
ஆலநபிமருக ரார்ப்பரித்துக்கோட்டைதனில்
நாலுதிக்குஞ்சென்று நாட்டமுடன்சத்தமிட்டார்
சத்தமிட்டபோதே தானுமந்தக்கோட்டையெல்லா
மெத்தவுமிடிந்திமோ மிருந்துற்றுவிழுந்திமோம்
அந்நேரமேயலியா ரார்ப்பரித்துக்காபர்களை
இந்நேரமேகலிமா யியம்புமென்றுதாமுரைத்தார்
அப்போதுகலிமாவை யன்புடனேசொன்னார்கள்
தப்பறவாய்க்கலிமாவை சொல்லாதகாபர்களை
வெட்டிக்கருவறுத்தார் வீரப்புலியலியார்
மட்டிக்லாச்சேனை மடிந்துபோய்மற்றுமுள்ளோர்
திட்டமுடன்கலிமாச்சொல்லி தீனவர்களானார்கள்

சட்டமுள்ளவாசன்மகள் தன்னுடையமந்திரியும்
எல்லாருந்தீருகி யிறகுல்நெறியில்வந்தார்
வல்லவாசன்மகள் மற்றுமுள்ளோர்தீருணபின்பு

{ அலியார் குதிரையைக்கொண்டு
மதினமாநகருஞ்சேர்தல். }

வட்டமிடும்பரியை வல்லாலிதானிருப்பி
பட்டதிக்குப்போற்று மருள்மதினம்வந்தனரே
வந்துமகரிபுவில் வல்லநபிதாள்பணியச்
சிந்தைமகிழ்ந்து செப்புவார்நன்னபியும்
நல்லவலிபுலியே நாட்டமுடனீபோகி
வல்லமையாய்வந்த வகைவிபரஞ்சொல்லுமென்றார்
அப்போதலிபுலியார் அன்புடனேயேதுரைப்பார்
செப்புமெமன்ராச்சியத்தில் சேர்ந்தசெனங்களெல்லாம்
கலிமாவுரைத்தார்கள் கத்தனுதவியினால்
சலியாமையெல்லோருந் தான்தீனவரானார்கள்
வெற்றிபெற்றவாறதனை வேங்கையலிசொன்னவுடன்
உற்றதிருநபியு முகந்திருந்தாரம்மானை
ஆதிநபியிறகுலன்புடனேமோதீனை
நீதியுள்ளவாங்குதனை நிச்சயமாய்ச்சொல்லுமென்றார்
சொல்லுமென்றுசொன்னவுடன் துய்யவொருமோதீனும்
நல்லதொருவாங்குதனை நாட்டமுடனுரைத்தார்
அப்போமகரிபுவி லாலநபிமார்களுடன்
செப்பமுள்ளயசவார்கள் சேர்ந்துதொழுதனரே
ஏசாவொருத்து மிதமுடனேதான்தொழுது
கூசாமலேயலியார் குதாயிறசூல்தாள்பணிந்து
தங்களிடமாளிகைக்குத் தானும்புரவியுமாய்
பொங்கமுடன்சேர்ந்து புரவிகட்டித்தானிருந்தார்
வானோர்புகழிறசூல் மன்னவருந்தானெழுந்து
கோனருளாற்சென்றார் குலவுகின்றமாளிகைக்குள்
யார்களசவாக்க ளவரவர்தம்மனைசேர்ந்தார்
பாருலகிலெமன்பதியின் பன்மைசொல்வேனம்மானை

எமன்பதியில்பப்பாத்தியார்நாயனைப்புகழ்தல்.

எமனென்றபட்டணத்தி லிறந்தவர்போய்மற்றுமுள்ளோர்
தாமுநல்லவாசன்மகள் தானிசிரமானதன்பின்

வல்லியிறையவனை வணங்கியிருந்தனரே
நல்லவரசன்மகள் நங்கையருந் துணைப்பார்
அப்போதவியவனே யதித்துமவர்தின்வழியில்
செப்பமுள்ளகலிமாத் தின்வழியெல்லாமறிந்து
ஆதிமுதலோனை யன்புடனேதான்வணங்கி
நீதியுடனென்னை நீணிலத்திநுன் படைத்துப்
பெண்ணென்றறியாமற் போற்றியென்னைவளர்க்க
முன்னேயுதவிசெய்தாய் மெய்ப்பொருளானவனே
ஆணென்றுசொல்லி யரசாளவைத்தவனீ
காணவந்தமன்னரெல்லாம் கப்பங்கட்டவெந்தனுக்கு
ஒப்பஞ்செலுத்தி யுலகாளவைத்தவனீ
செப்பமுடனகரிற் சேர்ந்தகொலுவினையிலே
அன்றலியாரைத்தானனுப்பிவைத்தவல்லவனீ
என்றன்மனைப்புதன்னை யெவரறியமங்கையென்று
கனதியலியுரைக்கக் கட்டுமட்டாய்வைத்தவனீ
அலியார்வனையல்தனை யன்புடனேகொண்டுவந்து
வலியவேயெந்தனுக்கு வினையவிடச்செய்தவனீ
இன்னமலியாருக்கு மெந்தனையேபாரியாகப்
பின்னுமுதவிசெய்வாய் பெரியோனேமெய்ப்பொருளே
காயமதாய்ச்செய்வாய்கர்த்தனேயென்றுமங்கை
நாயன்றனைவணங்கி நாளுந்துவாச்செய்திருந்தார்
அப்போதுநாய னன்புடையவானவரைச்
செப்பமுடனழைத்துச் செதிசொல்வான்சிபுரியிற்கு
தூதர்நபிதமக்குச் சொல்லுநீரெந்தன்சலாம்
நீதமுள்ளநாயன் நிச்சயங்களேதுசொல்வார்
வலியவெமன்ராச்சியத்தில் வாழுமரசன்மகள்
மெலிவாகவாறுதின மெல்லியருந்தான்சலித்து
இருக்கிறாளென்று மேகனுரைத்தாளென்றும்
பெருக்கநபிக்குச்சொல்லி பெரியோனலியுலியே
எகிமனைமுடித்து இப்போவரும்படியாய்
வாகாச்சிபுரியிற்கு வல்லவனுந்தானுரைக்க

(சிபுரியில் நபிக்குத்தூதுசொல்லல்

அப்போதுவானவரு மன்புடனேவிண்ணிறங்கித்
தப்பாநபியிறசூல் தன்முன்னேவந்துநின்று
தமதுசலாஞ்சொல்லித் [illegible] சலாமுரைத்து
இமையோருமப்போ சேகனுரைத்தபடி

வகைவகையாய்ச்சொல்லி மறைந்தனர்காணப்பாமே
தொகைவிசேடமெல்லாந் அப்போதுரைத்தபடி
சீலநபியிறசூல் அலியார்தனையழைத்துச்
சீலமுடனிறையோன் செப்புமொழிதப்பாமல்
கனமாயெமன்பதியின் கன்னியிடநீர்போய்
மணமுடித்துவாருமென்று வள்ளலிறசூலுரைத்தார்
நல்லநபியையப்போ வணங்கிமிகப்பணிந்து
நல்லதெனவேநடந்து நாட்டமுடன்மனையில்வந்து
செல்வநபிமகளாரைச் சிறப்புடனேதானழைத்து
கல்லவிபரமதாய் நாயகிக்குதாமுரைப்பார்
ஆண்டவனுரைப்படியே யாலநபிசொன்னதுவும்
வேண்டிமணமுடித்து விரைவில்வரச்சொன்னதுவும்
படிப்படியேசேதிதன்னைப் பாத்திமாவுக்குரைத்து
வடித்தபுகழிறசூல் மகளாரேயெனக்குவிடை
தாருமென்றேயலியார் தன்மையுடனேகேட்கப்
பாரில்மங்கையர்போற்றும் பாத்திமாவேதுசொல்வார்
வரிசையலிபுவியே மன்னவரேநீருமிப்போ
பிரியமுடனெடுநாள் போயங்கேதானிருந்தால்
வாடிமெலிந்திடுவேன் வள்ளல்புலியாகையினால்
நாடிப்போயொருநொடியில் நாட்டமுடன்வாருமென்றார்
நல்லதென்றுசொல்லி நாட்டமுடனேயலியார்
வல்லோனருளாலே வருவேனென்றுதானுரைத்து
விடையதனைவாங்கியலி மேலோன்நபிமுன்வந்தார்
தடையறவேவந்துநபி தாள்பணிந்துமேதுசொல்வார்
தாலிகட்டக்கூறைமகர்த் தாலிமுதல்கள்தாருமென்றார்
அலியாருரைக்கவாலநபிதாமுஞ்சொல்வார்
இப்போதலிபுவியே இறையோன்கிருபையினாற்
செப்பமுடனீர்கேட்ட திரவியத்திற்குப்பதிலாய்
இன்றுனக்கேகு மிறையோன்புவியலியே
சென்றுகூசாத்சன்னிருந் திறந்தவொருரொட்டியையுங்
கொண்டுபோய்க்கொடுநீர் குதித்தமகர்தனக்கு
என்றபோதேயலியா ரெழுந்துமேரொட்டியுடன்

(அலியாரெயமன்பதியில்மணமுடிக்கப்போகுதல்.)

வாக்கின்படிகூசாவெடுத்து வள்ளல்நபிதாள்பணிந்து
நோக்குடனேசென்றார் தானேயலிபூமியின்மேல்
அந்தவெமன்ராச்சியத்தில் சுசொரூத்திற்போயினரே
சிந்தைமகிழ்ந்து சிறந்தவொருவீதியெல்லாம்

பெண்கூறியேவருவார் பெரியோனருளாலே
விண்டுசிதானெழுப்ப விசையாய்நடந்துசொல்வார்
காசிபணமுமில்லை கைமுதலுந்தானுமில்லை
வீசுமுடைமானமில்லை வெண்முதற்றானுமில்லை
கூசாத்தன்னிரொட்டிக்குங் குறித்தமகர்தனக்கு
ஆசாரமாகப்பெண் ணாருங்கொடுப்பதுண்டோ
என்றுதெருவீதியெல்லா மேழையலிபெண்கேட்க
அன்றுதெருவீதியிலே யனேகம்பேர்கூடிச்சொல்வார்
மதியாமற்பெண்கூறி மணமுடிக்கவந்ததினால்
விதிவந்துமுடிந்திடுங்காண் வேறுதெருக்கேகுமென்றார்
போருமென்றுசொல்லவலி பெரியோனுதவியினால்
மறுதெருவில் யேழையலிபெண்கேட்க
அந்தெருவிலுள்ளோ ரப்படியேசொல்லிடுவார்
உற்றதெருவீதியெல்லா முன்மையலிபெண்கேட்டு
வந்தாரரசன்மகள் மாளிகைக்குமுன்னாக
எந்தனுக்குப்பெண்கொடுப்போ ரிங்குமுண்டோவென்றுரைப்
அப்போதுதாதியர்களனேகப்பேரோடிவந்து [பார்
செப்பமுடன்பார்ப்பார் சீராய்ப்புலியலியை
அதிலேயொருதாதி யரசன்மகள்தன்னிடம்போய்
மதியைப்போல்மயிலனமே மங்கையரேநீர்கேளீர்
பெண்கேட்டுவந்ததொரு புத்தியுள்ளமன்னனைப்போல்
எங்கும்நாம்கண்டதில்லை யிறையோனறிவான்காண்
வளையல்விற்கவந்ததொரு மன்னனைப்போற்காணுதென்றாள்
இளமையுள்ளராஜகன்னி யிதுவிபரங்கேட்டவுடன்
தானுமங்கேயோடிவந்து தயவாகப்பார்த்திடுவார்
பார்த்தரசன்மகளார் பாங்காய்மனதிலெண்ணி
வேற்றுமனிதரல்ல வேங்கையலியாமெனவே
அலியாரென்றேயறிந்து மாண்புமனையிலுள்ளழைத்து
நலியாமற்றாதியர்கள் நளினமலர்மெத்தையிட்டு
மெத்தையின்மேல்வந்திருக்க மெல்லியருந்தானுரைத்தார்
சித்தமகிழ்ந்தலியார் சென்றிருந்தாரப்போது
பப்பாத்தியாரும் பாங்காகவேதுசொல்வார்
இப்போதுநீரு மிங்குவந்தகாரியமேன்
என்றவுரைகேட்டு யேகனலியே துரைப்பார்
இன்றுவந்தகாரியந்தா னியம்புவேன்கேள்மயிலே
காசிபணமுமில்லை கனத்தமுதற்சேனையில்லை

கூசாதீரொட்டியுடைசராய் கொடுப்பேனுன் பெண்டனக்கு
இதுதனக்குச்சம்மதித்தால் யேகனுதவியினால்
நதியாய்மணமுடிக்கத் தான்வந்தேன் பெண்ணேயென்று
சொன்னமொழிகேட்டுத் தோகைமனமகிழ்ந்து
நன்னயமதாக நங்கையருஞ்சம்மதித்து
நானுமக்குப்பாரியென்று நவின்றமகள்சரியென்றுந்
தானுமலியாருஞ் சம்மதித்திருக்கையிலே
அந்தமொழிசொல்ல வரசன்மகன்றன்னுடைய
மந்திரிமாரையழைத்து வாருமென்றார்தாதியரை
தாதிகளோடி தானுரைக்கமந்திரிகள்
நீதியுடன்வந்து நின்றதபுசெய்தார்கள்
மந்திரிகளைப்பார்த்து வகைவிபரஞ்சொல்லி யெனக்குக்
கப்பமிடும்ராஜருக்கு கனவோலையனுப்புமென்ன
ஒப்புஞ்செலுத்திடுவோர்க் கோலைவிட்டாரம்மானே
அந்தமொழிகேட்டு அரசரெல்லாந்தானெழுந்து
வந்தாரலைகடற்போல் வான்பரிகள்சேனையுடன்
அரசரவர்க்கு மரண்மனையுந்தானியற்றிப்
பிரிசமுடனிருந்தார் பெரியோனுதவியினால்
அலியாரிருக்கவொரு வரண்மனையுந்தான்கொடுத்துக்
கலியாணச்சோடினைகள் கட்டுமெட்டாய்த்தான்கொடுத்தார்
நாட்டிவுள்ளபெரியோரும் நல்லவுலமாக்களுமாய்
கூட்டினார்பந்தற்கால் குணமாய்ப்பவளத்தினால்
பந்தற்கால்தன்னைப் பரிவானரத்தினத்தால்
விந்தைவிந்தையாக விசித்திரமாய்வேலைசெய்து
எல்லோருங்கூடி இயல்புடைப்பாத்திகாவை
நல்லாகவேயோதி நாட்டினார்பந்தற்கால்
பொன்னுலேவிட்டம் பொருந்தினாரந்நேரம்
நன்னயமாய்மேற்சிகரம் நாட்டினார்பந்தலுக்கு
சந்திரனைப்போலொளிவு தான்றுலங்குப்பந்தலெங்குங்
கந்தமலர்ச்செண்பகமுங் கமுகமரமுநாட்டிக்
கட்டினார்பொற்சரிகை கனகரத்நப்பந்தலிலே
எட்டுதிசையோர்மகிழ வலங்கரித்தார்பந்தல்தன்னை
கண்டவர்களெல்லாங் களிகூறப்பார்த்தனரே
கொண்டாடிவதிசயத்தைக் கொற்றவர்கள்தான்மகிழ்ந்தார்
அலியார்மணக்கோல மகமகிழ்ந்துபார்க்கவென்று
மலிவாயரசரெல்லாம் வந்திருந்தாரவ்வேளை
ஆலமிகப்புகழு மலியாரிதுநினைந்தார்

தாலியுடன்கூறையும் தகுமானதிரகமெல்லா
வலியவெனக்கேட்டால் வல்லவனேயேதுசொல்வான்
என்றலியாரு மிறையவனைத்தான்புகழ்ந்தார்
அன்றுசிபுரமிலே யாண்டவனுங்கூவிச்சொல்வான்
சொர்க்கந்தனிலிருக்குந் தம்பகுருனியலா
வர்க்கமுடனுத்தில மணமாய்த்தலமூழ்கி
பட்டுடுத்திநல்ல பலபணிகள்தான்பூண்டு
திட்டமுடன்குறுனியலாச் சேரவேதான்கூட்டி
அரசன்மகள்தனக்கு மல்பாகச்சேடிகள்
விரைவாய்ச்சொர்க்கமதில் வேண்டியபடிதலமெடுத்து
தாலியுடன்கூறை தகுமானவாசங்களும்
சாலாழிபிசிலிக்கவெனபல்மோதிரமும்
மைக்கூடுக்குசிப்பு மற்றுமுள்பாவாடை
கைக்குபாசபந்துங் கனகரவுக்கைகளும்
நடைக்கழகாயிருக்கும் நல்லயத்திற்பாடகமும்
இடைக்குயுகந்த வெழிலொட்டியாணமுடன்
சிலப்புடனேகூத்தனுக்குச் சிறந்தகுட்டிதானெடுத்துத்
தலங்கநல்லவாலத்திற் தோகையர்கள்தனைக்கூட்டி
இந்தாதிபோகமதா யெமன்பதிக்கனுப்புமென்ன
கத்தனுரைத்திடவே கனமானசிபுனாயிலும்
எட்டுப்பணிகளெல்லாம் கணக்கிலட்சங்காதெடுத்து
திட்டமுடன்வானர்க்குலைக்க சிறந்தபேர்லட்சமுடன்

{ எமன்பதிக்கி வானவர் வந்து அலியாரிடம்
வரிசைப்பணிகளைக்கொடுக்குதல். }

சொர்க்கமணத்துடனே சொகுசாயலங்கரித்து
வர்க்கபெமார்ச்சியத்தில் வந்தார்கள்வானோர்கள்
சங்கையுடனலிமுன் தான்போயியெல்லோரும்
மங்களமாய்ப்பணிகளெல்லாம் வள்ளலலியிடங்கொடுத்தார்
வாங்கியலியாரும் வல்லவனைத்தான்புகழ்ந்து
பாங்காயிருக்கையிலே பார்புகழும்வானோர்கள்
ஏழையலியாரிருக்குமபின்பமுள்ளமாளிகையைச்
சூழவலங்கரித்தார் சொர்க்கப்பதிபோலே
அந்தப்படியே யரசன்மகள்மாளிகையுஞ்
சித்தையிருமந்திரிகள் சிறப்பாயலங்கரித்தார்
அந்நகரவீதியிலே யங்குள்ளகுடிகளெல்லாருஞ்
சொர்ணமயமாகச் சோடித்தார்வீதியெங்குஞ்

பச்சைசயிலைத்தோரணங்கள் பாங்காகக்கட்டிவைத்து
இச்சையுடன்யாவர்களு மினிதாகவீற்றிருந்தார்
சங்கையுடன்தேசமெங்குந் தானேயலங்கரித்துப்
பொங்கமுடன்யாவர்களும் புகழ்ந்தேமகிழ்ந்திருந்தார்
அந்நேரஞ்சோவராச னன்புடனேயீன்றெடுத்தக்
கந்தியருந்தோழியுடன் கருத்தாகவேதுசொல்வார்
வாகாயலியாளை மணக்கோலமேகொண்டு
தாகமுடனேவருகத் தாலீபோய்நீசொல்லுமென்றார்
சொன்னமொழிகேட்டுந் தோகையர்களோடிவந்து
மன்னரலியிடத்தில் மகிழ்வாகச்சொல்லியபின்
அலியாருமப்போ கலீபாகத்தில்முழுகி
வலியோனருளாற்பணிகள் வகைவகையாய்த்தானணிந்து
துல்துல்பரியேறிச் சுரரோடெல்லாஞ்சூழ
வல்லோனருளாலலியும் வந்தாரேயூர்கோலம்
பேரிகைடம்மாணம் பெரியதவுல்முரசும்
பூரிகைமல்லாரி புதியதவண்டைகளும்
தாகசுரத்தித்தியுடன் நற்கோணக்கொம்புகளும்
யாகமுடசங்கீதம் பாடிவரப்பாவலர்கள்
மத்தளங்கைத்தாள மற்றுமுள்ளவாத்தியங்கள்
பத்தியுடன்மாதர்களும் பாடியேயாடிவர
இந்தவிதமாக வேகனலிபவனிவர
அந்தநகருள்ளோர் யாவர்களுமேதுசொல்வார்
வந்தாரொருவராய் வாகுடனேயேழையைப்போல்
இந்தப்பதுமைகளை யாவர்களுமறியாமல்
நல்லவர்க்குப்பெண்ணு நாங்கொடுக்கமாட்டோமென்று
சொல்லிவிட்டோமெனவே தோகையருமன்னவரும்
அரசன்மகளேயிவர்க் காண்டவன்மைத்தாமென்று
பிரியமுடனுரைத்துப் புகழ்ந்தாரவர்களும்
அப்போதலிபவனிவர வரசன்மகள்தான்பார்த்துத்
தப்பாவிறையோனுந் தானுதவிசெய்தாரென்று
சிந்தைமகிழ்ந்திருந்தார் தேன்மொழியாரப்போது
வந்துமலக்குகளும் வல்லோனீபுலியலியும்
மெஜினத்துமேளஞ் சிறப்புடனேதான்முழங்க
விண்ணதிருடப்பாணம் மேகத்திடிபோல்முழங்க
தேர்வாணமதிர்வெடிகள் ஜெகமெங்குமுழங்கிவரப்
பார்புகழுமத்தாப்பு பகல்வத்தியேந்திவர

பேரிகைசத்தமது பெருவானத்திடிபோலே
வாரிமகிழ்பதிர மன்னுலின்னுந்தானதிர
பெருமெயமன்பதியிற் பெருட்வெளிச்சமாகிடவே
ஊர்கோல வந்தார்கா ணுலகமெலாத்தானறிய
கொண்டுவந்துவிட்டார்கள் கோலமணப்பந்தலிலே
அல்றுமணவளாயி லரசுபுலிவீற்றிருந்தார்
வந்திறங்கியேயிருந்த வானவருங்கூரானியரும்
இந்தவுலகுதனி லிருக்குமனிதரைப்போல்
கோவராசன்பெற்ற குறித்தவொருகன்னியர்க்கும்
பாவனையதாகப் பாங்காய்வரிசைதனை
எத்தினர்வானவர்க ளெக்னருளாலே
பாந்தமுடன்பட்டுசேலும் பணிவகைகள்தானெடுத்து
வந்தாரொருமனதாய் மன்னன்மகளரண்மனைக்குள்
இந்தப்புதுமையெல்லா மேந்திழையார்தான்பார்த்து
வல்லோனெனக்கு வரவிட்டவரிசையென்று
நல்லநேரத்தில் நலங்கிட்டுத்தலைமுழுகி
பட்டுமெத்திமையிட்டுப் பாங்காட்பணிபூண்டு
இட்டமுடன்தானே யிருக்குமந்தவேளையிலே
அப்போதேயாண்டவனு மருளுவான்மலக்குகட்குச்
செப்பமுள்ளசிபுரியிலுஞ் சேர்ந்தமூன்றுமலக்குடனே
நாலுமலக்குகளும் நாட்டமுடன்றானிறங்கி
ஆலநபிமருக லியாரவர்தனக்கும்
வலியபெலன்ராச்சியத்தில் மன்னன்மகள்தனக்குங்
கலியாணமிகமுடித்துக் கடுகவேவாருங்களென்றான்

{ அல்லாவுரைப்படி நாலுமலக்குகளிறங்கி யலியாருக்கும்
பப்பாத்தியாருக்குந் நிக்காமுடிக்குதல். }

என்றிறையோனுரைக்க வெழுந்தார்தன்நால்மலக்கும்
அல்றுமெமராச்சியத்தி லலிவிருக்குமணவறையில்
வந்துயிறங்கினார்கள் வானவர்கள்நால்வர்களுஞ்
சிந்தைமகிழ்ந்து சிறப்பாயலிதமக்குக்
கொத்துபாவோதினார்கள் கோமானருளாலே
உற்றதொருநிக்காவை யுகப்பாயெழுதினார்கள்
எழுதிமுடிந்தபின்பு யேகன்புவியலியை
பழுதுவினைவாராமற் பாங்காயிருமெனவே
சுற்றியிருக்குங் கநகரத்னமாளிகைக்குள்
அந்நேரமேயலியை யன்புடனேகூட்டிச்சென்று

மங்கையிடகரத்தை மன்னரசிதான்பிடிக்க
துங்கமுடனேவானோர்கள் சோபனமுங்கொண்டாட
வானவர்குராணியரும் வாழ்த்தியறைந்தனரே
தானவியுமங்கையருந் தம்பிரானைத்தான்புகழ்ந்து
அன்றவியாரு மன்புடையதேவியரும்
உண்மைமகிழ்ந்து வுகந்திருந்தாரம்மானை
அவியாருந்தேவியரு மகமகிழ்ந்துமப்போது
வலியமேமராச்சியத்தில் வாழுங்குடிகளுக்கும்
உற்றபெரியோர்க்கு முண்மையுள்ளபாவலர்க்கும்
மற்றுமுள்ளராஜாக்கள் வந்தபடைகளுக்கும்
பூரணமாகப் போசனங்கள்தானளித்துத்
தாரணியோர்களுக்குந் தாம்பூலமுங்கொடுத்து
உகந்திருக்குநாளையிலே யுண்மையவியாரும்
அகமகிழ்ந்துதேவியுட னன்புடனேதானிருந்தார்
அதிகப்பிரியமுட னகமகிழ்ந்திருவருமாய்
பதிவாகக்கூடிப் பாங்காயிருக்கையிலே
நாடியவியாரும் நாயகியைப்பார்த்துரைப்பார்
நீடியமல்தரிக்குப் நிர்ணயமாயுன்வயிற்றில்
தரித்தவமதுந் தான்பத்துமாதஞ்சென்று
பிரித்துவிறையோனருளாற் பிள்ளைதனைப்பெற்றிடுவீர்
பிறந்தபிள்ளையாணாகில் பெயரமைக்கத்தான்கேளீர்
சிறந்தமுகம்மதுகனியாவா வென்பாய்ச்சேயிழையாளும்
பாத்திமாவென்று பரிவாகப்பேரிடென்று
ஏற்றமனைவியருக் கின்பமுடன்சொல்லிடவே
அன்றுவரசியரு மன்புடனேநல்லதென்றார்
ஒன்றாயிருவருமா யுகந்திருக்கும்வேளையினில்
அப்போதுகங்கு லகன்றுவிடிவதற்குத்
தப்பாமற்கோழி தானுமங்கேகூவிடுமாம்
கூவினசத்தங் குதாபவியுர்தான்கேட்டு
ஆவலுடன்தேவியைப்பார்த் தன்புடனேபயணமென்று
சொன்னவுடனே தோகையருந்தானெழுந்து
தன்னயமாவிடைகொடுத்து நாயன்றனைப்புகழ்ந்தார்

(அவியார் மதினமாநகர்போகுதல்.)

கதிபருள்வோன்கிருபையினால் காரிகையார்விடைகொடுக்க
மதினந்தனைநோக்கி வள்ளலவிதானெழுந்து
நடந்துமவியுவியார் நாட்டமுடன்பசிரோகத்தில்
படர்ந்துபுகழ்மதினத்துப் பள்ளிதனில்வந்தனரே

வந்தவபிபுலியார் வல்லோன்றனைத்தொழுது
அந்தமுள்ளமாமறு ரடிபணிந்துதாமுரைப்பார்
சென்றுமணமுடித்துச் சிறுடனேவந்ததெல்லாம்
அன்றுநபியார்தமக் கன்புடனேதானுரைத்தார்
அப்போதேயாலநபி யகமகிழ்ந்துதானிருக்கத்
தப்பாதவிபுலியுந் தாமிருக்குநாளையிலே

பப்பாத்தியார் பீவியவர்கள்வயிற்றில்

முகம்மதுகனிபாவாவுதித்தல்.

அந்தவெமாச்சியத்தி லரசன்மகள்கெர்ப்பமுண்டாய்
பந்தமுடனேபத்து மாதமுந்தான்சென்றபின்பு
ஆண்பிள்ளையேயொன் றன்புடனேபெற்றனரோ
வான்புவியைப்படைத்த வல்லவனருட்படிக்கி
பாரமுள்ளகூரானி பண்புடன்பிள்ளையையெடுத்துச்
சீர்பெருகுஞ்சொர்க்கமதிற் சென்றமுர்தங்கொடுத்து
சுவர்க்கநதியில் துய்யதொருநீராட்டி
யவர்க்கமுடன்தொப்புளறு மன்புடனேதான்கொய்து
அன்னத்துமிட்டுத் துடக்கொன்றுமில்லாமற்
கண்ணுக்குமையுமிட்டுக் கஸ்தூரிதான்பூசி
வைத்துமங்கேதானிருந்தார் வாகுடன்கூரானியப்போ
உற்றவரசன்மக ளுகந்துடனேபிள்ளைதனை
காணுமதிகலங்கிக் கனதிசலிப்பாக
வேணுமென்றதாதியர்கள் விரைவாகப்பார்த்திடவே
அரசன்மகளுமப்போ தாண்டவனைத்தான்புகழ
விரைவாயிறையோனநிந்து விண்ணவனைத்தானழைத்துச்
செப்புவானப்போது சீர்பெருகும்பிள்ளைதனை
இப்போதெடுத்துவியலானராசன்மகள்
கையிற்கொடுத்துக் கடுகவேவாருமென்றான்
வையம்புகழும் வல்லகூரானியர்கள்
இளமைமடவார்க ளெல்லோருந்தான்கூடி
குழந்தைகொடுப்பதில்லைக் கோமானேயென்றுரைத்தார்
வல்லவனேநாங்களுந்தான் மதலைக்கமுர்தங்கொடுத்து
நல்லதிந்தப்பிள்ளைதனை நாங்கள்வளர்ப்போமென்றார்
அப்போதுநாய னகமகிழ்ந்துயேதுசொல்வான்
தாப்பாதுபுவியிற் றாய்வளர்க்கவேணுமென்றான்
என்றுரைத்தபோது யின்பமுள்ளகன்னியர்கள்
அன்றுமலக்குகையி லன்புடனேதான்கொடுக்க

ஓங்கியேவுர்னவரும் வல்லோனருளாலே
தாங்கியரசன்மகள் தன்மடியில்வைத்தனளே
வைத்தசிறுபிள்ளைதனை மங்கையரும்பாராமல்
சித்தமிகத்திகைத்துத் தியங்குகின்றநேரமதில்
அன்புடனேவானவரு மழகுள்ளமதலைதனைப்
பண்புடனேயப்போ பையக்கிள்ளிவிட்டகன்றார்
தடையறுத்தேபிள்ளையது தாங்காமலேயழுக
அடையலர்கள் தான்பணியு மரசன்மடஞ்செவியில்
கேட்டுமங்கைபிள்ளைதனைக் கிருபையுடனேயெடுத்து
தாட்டாண்மையாகத் தான்மார்பிற்றணைத்து
பாலமுர்தமூட்டிப் பாங்காய்வளர்த்திடுவார்
சாலவேதொட்டிலிட்டுத் தானேதாலாட்டிடுவார்
இன்னுமுலகுதனிலெவரு மெடுத்துப்போவாரென்று
அன்னையருந்தான்பயந்து மன்புடனேமைந்தனுக்கு
பொன்னுலாசமைத்துப் புத்திரனையங்குவைத்து
மின்னாரனைவர்களை மேற்காவலாகவைத்து
இந்தப்படிவளர்த்தா ரிறையோனருளாலே
அந்தமுள்ளமங்கையரு மன்புடையமைந்தருக்கு
நீதமுடனேபெயரும் நிச்சயமாய்வைப்பதற்கு
வேதவேதியருக்கும் வேண்டிப்பொருட்கொடுத்து
முன்னுளவியுரைத்த முறைமையதுதப்பாமல்
இந்நாள்முகம்மதுகனிபாவா வென்றுமேபெயருமிட்டாள்

(முகம்மதுகனிபாவாவை பள்ளிக்குவைத்தல்.)

வளர்ந்தசிறுபிள்ளையது வயதடைந்தாண்பின்பு
குளந்தைதனைப்பள்ளிக்கு வைத்தாரேகோதைநல்லார்
பள்ளிக்குவைத்துப் பரிவாகவேந்தையிலே
பிள்ளையுமப்போ பெரிசிவயதாகி
ஓதுமந்தநாளையிலே யொக்கவரும்பிள்ளையெல்லாம்
ஆதியன்மகனை யப்போதுபார்த்துலாய்யார்
தந்தையறியாத தறுதலியனென்றுசொல்லச்
சிந்தைமிகக்கலங்கிச் சேதியைநாம்கேட்ப்போமென்று
அப்போதலிமகனு ரன்னையருகில்வந்து
தப்பாதமாதாவே தான்கேளுமொருவார்த்தை
பள்ளிதனிலோதும் பரிவானபிள்ளையெல்லாந்
தள்ளியிருந்துந் தகப்பனில்லாப்பிள்ளையென்றார்
அந்நேரமரசன்மக ளானதொருபைங்கிளியார்

தன்மையாய்மைந்தனுக்குத் தானுரைப்பாரம்மானே
மதினகரிருக்கும் மகம்மதனார்தன்மருகர்
அங்கவரப்பெற்ற வலியாருன்றந்தையென்றார்
அந்தமொழிக்கேட் டன்புடையதாயேதான்
தந்தைதனைப்பார்த்துவரத் தாரும்விடையெந்தனுக்கு
தாரும்விடையென் றுரைக்கத் தாயார்மனமகிழ்ந்து
வாருஞ்சிறுபிள்ளையேநீ வல்லோனலிமகனே
இன்னஞ்சிலநாளிருந்து யிசைந்தமனப்பொருத்துத்
தன்மையாய்ப்போமென்று தாயாருரைத்திடவே
உரைத்தமொழிகேட் டுண்மையுள்ளபிள்ளையுந்தான்
கருத்தாய்மிகவெழுந்து காதலுடன்றான்வணங்கி
விலக்கவெண்ணவேண்டாம்நீ வெற்றியுள்ளமாதாவே
தலத்திலுள்ளோர்புகழும் தம்பிரானெந்தனுக்கு
உதவிமிகவுமுண்டு வுண்மையுள்ளமாதாவே
இதமாகப்போய்வருவே னிப்போதுவெந்தனுக்கு
தடைசொல்லாமல்நீர் தானேயெனையனுப்ப
விடைதாருமென்றுசொல்ல வெற்றியுள்ளதாயுமப்போ
ஆதியருளுண்டென் றவர்மனதிற்றானுமெண்ணி
எதுவேண்டுமோமகனே யிப்போதுவுந்தனுக்கு
கேளுமகனேயெனக் கிருபையுடன்றான்கேட்பார்
வாளுடனேபுரவியுந்தான் வகையாகத்தாருமென்று
இந்தவிதமாய்க்கேட் டிருக்குமந்தவேளையிலே
அந்தமுள்ளநாய னருளாற்சிபுறாயிலே
செப்பமுடனெழுந்துச் செப்புவான்சேதியொன்று
பப்பரத்தியம்மாள் பயன்றெரித்தபாலருக்கு
சுவர்க்கத்தனிற்சென்று சுத்தமுள்ளவாள் புரவியும்
அவர்கைக்கிசைந்த வாளதுவுங்கொண்டுசென்று
வேஷமாறிப்புரவி விற்கவந்தசவுதாகிரிபோல்
தேசம்புகழலிபாரி தேவியார்முன்கொண்டுசென்று
விற்றுநீர்வாருமென்று மேலோன்சொல்வானவரும்
சற்றுமொழிதப்பாமற் றான்வந்தார்சொர்க்கமதில்
இலங்குமந்தவான்பரியை யெழிலாயலங்கரித்துக்
கலக்கமதுமில்லாமற் ககனம்விட்டுத்தானிறங்கி

சிபுறியில்சவுதாகிரிபோல்குதிரை
கொண்டுவருதல்.

வந்தாரொமராச்சியத்தில் வள்ளலலிதேவியர்முன்
சிந்தைமகிழ்ந்து சிறப்புடனேவிட்டனரே

விட்டபுரவிதன்னை வேந்தனிடதன்மகளுந்
திட்டமுடன்பார்த்துச் செப்புவிலையென் றுரைத்தார்
அப்போதுவர்ணவரு மனைகவிலைசொல்லிடவே
செப்புவிலைபோல திரவியமுந்தான்குவித்து
வாங்கினார்வான்புரவி வமைச்சனுக்குவேண்டுமென்று
பாங்காகப்புரவிதனைப் பரிவாகக்கட்டினபின்
அந்தப்புரவியுட னணைதோருவாள்தனையுந்
சிந்தையகிழ்ந்து கொடுத்துச்சிபுனாயிலுப்போய்மறைந்தார்
மறைந்தவுடனே முகம்மதுகனிபாவும்
சிறந்தகுதிரையையுந் திடவாளுங்கைப்பிடித்துச்
செப்பமுடனேயறிந்த சிர்பாதமேபணிந்து
இப்போதுநான்போக வெனக்குவிடைதாருமென
போய்வாருமென்றுசொல்லிப் புகழ்பொருந்துந்தாயாருந்
தூயமக்கள்றனக்குநற் சொல்லுவாரோர்சேதி
மதினாநகர்தனக்கு மகனேநீர்போய்ச்சேர்ந்தால்
சதிரிலருமைந்துல்லா கணமானதவிருளத்தில்
தலைமூழ்காமற் றுமைந்தவெள்ளாமை
நிலையாகக்கோதும்பை நிற்குப்பயிர்தனையும்
குதிரையுமேமேயாமல் கொள்கையுடன்றானிருப்பாய்
அதிவேகமாகநடந் தற்நகரந்தான்சேர்ந்து
திங்கள்தனையழைத்தச் செகவுநபிதாள்பணிந்து
சங்கையுடனன்பாவார் தலைக்கலிருந்து
வந்துபசரென்று மாதாமகிழ்ந்துரைக்க
அந்தநல்லவேளையிலே யல்லாவுதவியினால்

(முகம்மதுகனிபாவர மதினாநகர் போய்ச்சேர்தல்.)

நடந்துமதினம்போய் நாட்டமுடனேதுசெய்வார்
அடர்ந்தபத்துல்லாவுளத்தி லறிந்திறங்கிநீர்கலக்கி
நீராடிநிற்கையிலே நீந்புள்ளகோதும்பையில்
சாரிவந்ததந்குதிரைதானேடிமேய்த்திடவே
அப்போதலியாரு மன்புடனேதலைமுழுக
செப்பமுடன்மக்களுடன் சிறப்புடனேநீராட
கூட்டிவருகையிலே கோலமுள்ளதுரணியில்
நாட்டமுடன்மக்களுடன் தற்குளத்தைப்பார்க்கையிலே
எமன்பதியிருந்துவந்த வெழில்முகம்மதுகனிபாவும்
அமைந்தகுளத்தை யலக்கலக்கிநின்றதுவும்
தாரணியிற்கோதும்பைதன்னைத் தான்குதிரைமேய்த்ததுவும்
வாரணியிலினாயெல்லா மொக்கக்குன்டிபின்னாலும்

கண்டுமெலியார் கருத்தினிற்கோபமதாய்
இன்றுசிறுபயலே யிப்படியுஞ்செய்வாயோ
என்றுமலியாரு மிருவிழியுந்தான்சிவந்து
துன்றுபட வெட்டத் துணிந்துகைவாளெடுத்து
வெட்டுவாரப்போது வேந்தரலியாரும்
பட்டதொருவாளும் பந்துகுதித்தாப்போலெழும்ப
பின்னுமவர்வெட்டப் பெருக்கமதாமுன்போல
வன்னமுள்ளவாளாலே மறுபடியும்வெட்டிடுவார்
வெட்டுகின்றபோததனை வேங்கைப்புலிமகன்வாளால்த்
தட்டியலியார்கரத்தைத் தன்கையிலேபிடித்து
இருகரமுமொன்றாக விடதுகையிற்பிடித்துப்
பெருக்கக்குதிரைதன்னைப் பின்னொருகையாற்பிடித்து
மன்னனுதவியினால் முகம்மதுகநிபாவாசொல்வார்
நன்னேர்மையுள்ள நபியிடத்தில்வாருமென்றார்
அப்போதலியாரு மன்புடனேதானடந்தார்
செப்பமுடனிருவர்களுஞ் சேர்ந்துவருகையிலே
ஆதிமுகம்மதரு மவர்கள்வருவதைப்பார்த்து
நீதியிறையவனு மிப்புதுமைசெய்தான்காண்
என்றுமனதிலெண்ணி யிருக்குமந்தநேரமதில்
சென்றுநபியருகே சேர்ந்துவழக்குரைக்க
செகமகிழுநன்னபியுஞ் சிந்தைதனில்மகிழ்ந்து
முகம்மதுகனிபாவாவை முகம்மதர்தூக்கியேமடியில்
வைத்திருக்கவப்போது வல்லோனலியுரைப்பார்
உத்தவழக்குரைக்க வந்தேனுனங்களுடன்
அந்தவழக்கை யன்புடனேகேளாமல்
வந்தசிறுவனைநீர் மடியில்வைத்தகாரணமேன்
என்றலியார்கேழ்க்க விறசூல்நபிமகிழ்ந்து
அன்றலியார்தனைப்பார் தன்புடனேயுரைப்பார்
இப்போதுநீரோகியின்பமுடனற்குளத்தில்
செப்பமுடன்றலைமுழுகித் திரமுடனென்னருகில்வந்தால்
பின்னேவழக்குரைப்பேனென்று பெரியோனபியுரைத்தார்
அந்நேரவேளையிலே யலியார்குளஞ்சேர்ந்தார்
அந்தநேரமோதினு மன்புடனேவாங்குசொல்வார்
சிந்தைமிகமகிழ்ந்து தீனபியும்யார்களுடன்
துய்யோனசர்தொழுகத் துணிந்துமங்கேதானெழுந்து
பையநடந்துவந்தார் பாங்காகியகிணற்றில்

கூவல்திரக்காதிருக்கக் குதித்துமங்கேவந்தவர்கள்
ஆவலுடன்பார்த்து மங்கைதானில்திடவே
அப்போதநபியிறசூ லவளையுப்பார்த்துரைப்பார்
தப்பாதவிபுலியார் தான்வரவுமில்லையென
முகம்மதுகனியாவாவு முக்கியமாயேதுசொல்வார்
செகப்புகழுநன்னபியே சிறப்புடனேகூவல்தனை
திறப்பெறுமென்றுசொல்லத் தீயநபியேதுசொல்வார்
வரமருளுநாயன் வல்லபுலியல்லாமல
மற்றொருவர்தான்திறக்க வல்லமைதானில்லையென்ன
உற்றபுகழுடைய வுண்மைநபிநீர்கேளும்
இந்நேரந்திறப்பே னென்றிறந்ததைப்பாருமென
நன்னபியுதாலெதன்று நாட்டமுடன்பார்த்துநிற்க
குன்றுமலைபோல் குதித்ததொருகல்லதனைச்
சின்னவிரலாற்றூக்கிச் சிறுவருமேபோட்டிடுவார்
போட்டபொழுதே புகழ்பெரியநன்னபியும்
நாட்டமுடனிப்புதுமை நாயனுதவியென்று
நபியுடனேயார்களுந்தான் நாடியொதுச்செய்திடுவார்
தபப்பெருகுமசயாக்கள் தாஜெதுவுஞ்செய்திடுவார்
அப்போதியாவர்களு மசறுதொழுதனரே
செப்பமுடனிறையைத் தொழுதிருக்கும்வேளையிலே
தலைமுழுகப்போயலியுந் தண்ணீர்தனைப்பார்த்தார்
கலங்கியிருந்ததினுந் கலங்கல்தெளியமட்டும்
இருந்தார்தெளிந்ததின்பின் னினிதாய்த்தலைமுழுகி
பொருந்துமனத்தோடு போந்தார்நபியிடத்தில்
அந்நேரவேளை யந்தக்கிணற்றனிலே
நின்னயமாய்நீரெடுக்க நீதியலிதான்பார்த்து
இந்தக்கிணறுமூடுங்கல்லை யெவர்தான்திறந்தாரென்று
வந்தலியார்கேட்க வள்ளல்நபிதானுரைப்பார்
செப்பமுடனலியே சித்தையுடனீர்கேளீர்
தப்பிலாச்சொல்லுகிறேன் தானடந்தவாறதனை
முன்னுளிறையோன் மொழிந்தவுரைப்படியே
அன்னமெமராச்சியத்தி லங்கேநீர்போனதுண்டோ
குதிரையும்வாள்தனையுங் குதித்துநீர்போனதுண்டோ
அதிரநடந்தலியே யன்புடனேபெண்கேட்டு
நடந்துதெருவீதியெல்லா நாட்டமுடன்போனதுண்டோ
படர்ந்தபுகழிராசன்மகள் பாரியென்றுசொன்னதுண்டோ

அந்நேரம்வானவர்க ளன்புடனேவந்ததுண்டோ
மன்னனுதவியினால் மணமுநீர்முடித்ததுண்டோ
அந்தவரசியர்க்கு மருள்வார்த்தைச்சொன்னதுண்டோ
மைந்தன்பிறந்தால் முகம்மதுகனிபாவாவென்று
வெற்றியுள்ளபெயர்வைக்க விருப்பமாய்ச்சொன்னதுண்டோ
புத்திசொல்லிவந்தீரோயந்தப் புதுமையுள்ளபிள்ளையிது
இந்தநேரமோதச்செய்ய விக்கினத்தைதிறக்குதற்குத்
வந்துநீர்திறவாதால் முகம்மதுகனிபாவாதிறந்தார்
என்றநபியுரைக்க வேகன்புலியலியார்
அன்றுமனஞ்சலித்து மன்பாகப்பள்ளிதனில்
புகுந்துக்கதவடைத்துப் புலம்பியங்கேதாமிருந்தார்
மிகவுநபியிறசூல் விளம்புவாரப்போது
மன்னனுதவியினால் முகம்மதுகனிபாவாநீர்
இந்நேரமுன்றந்தையரை யேகிநீரழையுமென்றார்
என்றநபியுரைக்க விறையோனருளாலே
அன்றுமந்தக்குழந்தை யன்புடனேப்பள்ளியிலே
போய்நின்றுதந்தையரைப் பிரியமுடனேயழைக்கச்
சேயழைத்தசத்தந் திராலிதான்கேட்டு
பொங்கமுடன்வெளியில்வந்துப் பிள்ளைதனையெடுத்தணைத்துத்
திங்கள்தனையழைத்துச் செல்வநபியருகில்வந்தார்
அந்நேரவேளைதனி லாலநபிதாமுரைப்பார்
கன்னல்மொழியார்மகனைக் காதலுடன்கூட்டிக்கொண்டு
வீட்டுக்குப்போமென்று வேதாம்பர்தாமுரைத்தார்
நாட்டமாய்ப்பிள்ளையைத் தான்றூக்கியேயப்போ
முத்தினபிள்ளையசனுசைனை முன்னேநடத்திக்கொண்டு
வந்தாரலிமனையில் மனமுமகிழ்வர்க
ஆலநபிமகளா ரன்புடையபீவியரும்
பாலர்நடந்துவரப் பாங்காகத்தான்பார்த்து
வரிசையசனுசைனார் மண்ணில்நடந்துவரப்
பிரியமுடனோர்பிள்ளையைப் பின்னெடுத்துவந்ததென்ன
உத்தமதொருபிள்ளைகளு முகந்துநடந்துவரப்
புத்திதடுமாறிப் போனீரோவாளரசே
என்றுரைத்தபோதே யேகன்புலியுரைப்பார்
நன்றியிறசூல்மகளே நல்லதொருபீவியேகேள்
வல்லோன்வரவிடுத்த வான்புரவிதானுமது
நல்லயமராச்சியத்தில் நாட்டமுடன்கள்ளர்கொண்டு
போனபுரவியதைப் போய்த்திருப்பிவந்தவிதந்

தானுமறியீரோ தயவுடையபீவியரே
அந்தவரசன்மகளை யன்பாய்மணமுடித்து
வந்ததறியீரோ வல்லோநபிமகளே
அப்போதரசன்மக ளன்புடனேயுலாவித்
தப்பாமற்பெற்றெடுத்த தன்குழந்தைதானல்லவோ
அகமகிழவெந்தனுக் கரியபெரியோன்கொடுத்த
முகம்மதுகனிபாவா யிவர்முகம்மதிறசூல்மகளே
என்றபொழுதே யிறசூல்நபிமகளார்
அன்றுவகமகிழ்ந்து மன்புடனேபீவியரும்
நலமுடனேயலியாரிடத்தில் நன்மகனைத்தான்வாங்கிப்
பலமுடனேதான்வாழ்த்திப் பரிவாகவந்நேரஞ்
சிந்தைகளிகூர்ந்து சீராயொருமனதாய்
வந்ததிருமகனை வாரிமடியில்வைத்தார்
வள்ளலலியாரு மன்னனிறசூல்மகளும்
உள்ளங்குளிர்ந்து முவப்பாகத்தானிருந்தார்
அப்போகுழந்தையது மாண்டவனுதவியினால்
தப்பாவயதுபத்துத் தானறியாப்பாலகனும்
ஏகனுதவியினா லிருமூன்றுமாதமுமாய்
வாகாகவங்கிருக்க வள்ளலலிபீவியரும்
பழுதில்லாமல்வளர்த்துப் பாங்காயிருக்கையிலே
வழுவில்லாமதினநகர் வாழுமலியார்தமக்கும்
அரியபெரியோ னருளுதவிதன்னாலே
சிறப்புமிகுந்திடுமாஞ் செல்வமதுமோங்கிடுமாய்
இந்தப்படியா யிருக்கவிறையோனருளால்
அந்தயெமராச்சியத்தி லரசனிடதன்மகனும்
அப்போதுபிள்ளைதனை யன்புடனேமனதிலெண்ணிச்
செப்பமுடனேவருடஞ் சென்றதினால்மனதுநொந்து
வாடிமெலிந்து மதினநகர்தான்போக
கூடிப்படையுடனே கோதையருந்தான்போந்தார்
வந்தாரரசன்மகள் மதினநகர்மாளிகைக்குள்
முந்திநபிதாள்பணிந்தார் முன்னோனுதவியினால்
மன்னனருளாலே வான்புரவிதானேறும்
அந்நேரமலிபாத மன்புடனேதான்பணிந்து
நபிமகளார்பீவியிட நற்பதமுந்தான்பணிந்து
சுபமிகுந்தபாத்திமுத்தாஞ் சொல்வார்மகிழ்வாழ்த்தி
ஏகனுதவியினா லிருவர்களுமொருமனதாய்
ஏகாமனையில் வள்ளலலிமக்களுமாய்

இருந்தாரகமகிழ்ந்து யேகனுதவியினால்
பொருந்தியிருக்கப் போர்வேந்தன்றன்மகளும்
சேர்ந்தவியாருடனே சேயிரண்டீன்றனரோ
சார்ந்தகுழந்தைபயந் தானேநபிமகளும்
ஆண்டவனுதவியினா லஃமெனவே பெயருமிட்டார்
வேண்டியெமங்கையரும் விருப்பமுடனேநல்ல
பின்னுமொருமகனைப் பெற்றநறுப்பிரியமுடன்
மன்னவயொழுமானார்கள் காசிம்மென்றும்பேர்கொடுத்தார்
மைந்தர்வளர்ந்திடவே மன்னரசன்றன்மகளுஞ்
சிந்தைமகிழ்ந்து சிறப்பாயிருந்தனரோ
இருந்தவரசன்மகளே மூவருடமிருந்து
திருந்தமவுத்தானால் சேர்ந்தார்களசுவர்க்கபதி
மவுத்தாயவர்போக மன்னனுதவியினால்
சவுத்தாயடக்கித் தானிருந்தார்யாவர்களும்
அடக்கிமுடிந்தவுடன் யாவர்களுங்கூடிப்
படைத்தோனருளாலே பாத்திகாயோதினரோ
ஆலநபியார்களு மசாபாக்களுமிருந்து
சீலமுடனலியார்தஞ் சீரானபிள்ளைகளும்
கூடியும்போ ருண்மாயிருக்கையிலே
வாடியிருக்கு முகம்மதகனிபாவானை
ஆலநபித்தாமு மருகிலழைத்துவைத்துச்
சீலமுடனே சிறந்திருக்குமவேளையிலே
அன்றுமெமராச்சியத்தி லரசருமில்லாததினால்
பண்பினமந்திரிமார் பலவிதமாயோசித்து
மதினநகர்தனக்கு வாகானசத்தேருதி
திருமானதூதர்களைத் தாம்போகவனுப்பினரோ
கத்ததனைவாங்கிக் கருத்துடனேபாதைசென்று
வித்தகனார்வாழு மிகுமதினைச்சேர்ந்தனரோ
சென்றுடனேகத்ததனைச் சீக்கிரமாய்த்தானெடுத்து
அன்றுநபியிடத்திற் கொடுத்தவுடனேநின்றனரோ
கத்ததனைவாங்கிக் காரணமுகம்மதருஞ்
சித்தமகிழ்ந்து சிறப்புடனேயந்நேரம்
அலியார்தனையழைத்து மாலரபிதாமுரைப்பார்
வலியர்நகர்மகள் வந்திருந்தமந்திரிமார்
நன்னேர்மைபாவெமுந்து நட்டமுள்ளகத்திதெனும்
அந்நேரமவினையி லன்னடுடனேநாங்கொடுக்க
வேர்த்தப்பார்த்தாக்கால் வல்லோனருளாலே


புசித்தவெமராச்சியத்திற் புகழ்சார்ந்தசீர்மையெல்லாம்
பட்டத்தரசு பதிவாகவில்லாமல்
திட்டமுடனீராச்சியமுஞ் சிறப்பாயிருக்கவில்லை
என்றெழுதுங்கத்ததனை யின்பமுடனேபார்த்தவுடன்
அன்றலியாருடனே யாலநபிதானுரைப்பார்
ஜெசமுழுதுமானுதற்குச் சிறப்புலிமேகளும்
முகம்மதுகனிபாவாலை முடிசூட்டிவைப்பதற்கு
அனுப்பவேண்டுமென்றே யாலநபிதாமுமப்போ
கனிந்துமிகச்சொன்னவுடன் கணமாகவந்நேரம்
நல்லதென்றுசட்டமதித்தார் நாயனடியலியார்
வல்லபுகழிறசூலை மனமகிழ்ந்து தூதர்களை
அழைத்துமிகநிறுத்தி யவர்கையிற்கத்தெழுதி
தழைத்தயெமராச்சியத்திற் றூன்சேர்ந்தசீர்மையெல்லாம்
வாழுமரசர்முகம்மது கனிபாவாமுடிதரிகத்
தாழ்வுடன்வந்து தான்சேரவென்றெழுதி
ஈய்ந்தார்கள்கத்ததனை யெடுத்துமேதூதர்களும்
வாய்ந்தயெமன்பதியில் வந்துமந்திரிகையீய்ந்தார்
கத்ததனைவாங்கிக் கண்மேலேதானேற்றி
சித்தமகிழ்ந்துடைத்துச் சிறப்பாகவாசித்துப்
பார்த்துமனமகிழ்ந்து பாருலகிலரசருக்குக்
கீர்த்தியுடன்மறுகத்துக் கிருபையுடன்றானெழுதி
தூதர்கையிற்கொடுத்துச் சீக்கிரமாய்ச்சொல்லுமென்றார்
காதலுடனேகத்ததனைக் கருத்தாகத்தானெடுத்து
பாருலகின்ராசருக்குப் பாங்காகயீய்ந்திடவே
சீருடனேபார்த்தரசர் சேர்ந்தபடைத்தான்கூட்டி
வந்தார்கள்யெமன்பதியில் வல்லோனருளாலே
சிந்தைகளிகூர்ந்தரசர் சேர்ந்திருக்கும்வேளையிலே
மதினநகரமதில் முகம்மதிறசூலுடனே
கதியிலருமலியாருங் கனமானயாருகளும்
முகம்மதுகனிபாவாவும் முக்கியவசபாக்களுடன்
ஜெகமகிழுகின்ற சேனைபரியானையுடன்
மேளதாளங்களுடன் மிகவுடப்பாரத்துடனே
தூனுமின்றியோனருளால் யாவர்களுந்தானெழுந்து
நடந்தயெமனிராச்சியத்தில் நாட்டமுடன்போய்ச்சேர்ந்தார்
அடர்ந்துவந்தராஜர்களு மந்தசமந்திரிகளும்
வந்துநபிபிறசூல் மலர்ப்பாதம்போற்றிசெய்தார்
அந்தநல்லவேளையிலே யாலநபிதாமுரைப்பார்

முகம்மதுகனிபாவிற்கு முடிசூட்டவேணுமென்று
அகமகிழுமந்த்ரிகட்கு மரசருக்குந்தானுரைத்தார்
அப்போதுமந்த்ரிகளு மரசர்களுந்தாமுரைப்பார்
இப்போதுமெங்களுக்கு மிதுவேசரியென்றுரைத்தார்
சரியென்றுரைத்திடவே தானவர் நபியிறசூல்
பரிவானபதிதனிலே பந்தல்களுந்தோரணமும்
சிங்காரமாகச் சிறப்பாயலங்கரித்து
மங்காதசந்திரன்போல் மண்டபமுந்தானியற்றி
மண்டபத்தினுள்ளே மணியாஞ்சிம்மாதனமுங்
கண்டவிடமெல்லாங் கனகரத்தினம்பதித்து
முகம்மதுகனிபாவானவ முனையாச்சிம்மாதனத்தில்
பகையொருவரில்லாமற் பண்புடனேதானிருக்க
பட்டமதுகட்டப் படைத்தோனருளாலே
திட்டமுடனிராஜாக்கள் சேரவேசூழ்ந்துநிற்க
ஆலநபியிறசூ லருகாகவேயிருக்கச்
சீலமுடன்யாருகள் சேரவேவீற்றிருக்க
மற்றுமுள்ளவசபாக்கள் மனமகிழ்ந்துதானிருக்கக்
குற்றமில்லாவேசமுங் கூடிமகிழ்விருக்க
பாசத்துடனரசர் படைகளுஞ்சூழ்ந்துநிற்க
மாசில்லாமணிபோலே முகம்மதுகனிபாவிற்கு
அட்டதிக்கும்போற்று முகம்மதிறசூல்நபியார்
பட்டமதுகட்டினார் படைத்தோனருளாலே
ஆமினல்லாவென் றன்பாய்த்துவாவோதியபின்
சிமைதனிலுள்ளரசர் சேரவேபணிந்துநின்று
கப்பமுங்கட்டி கனமாயிருங்களென்றார்
அப்போதரசர்களு மருட்படியேயாகுதென்றார்
முகம்மதுகனிபாவானவரு முதன்மையுள்ளமந்திரியும்
அகமகிழ்ந்தானழைத்து மாலநபியேதுசொல்வார்
அட்டதிசைமுழுது மடர்ந்திருக்குங்காபர்களைத்
திட்டமுடன்கலிமாச்சொல்லிந் தீன்விளக்குங்களென்றும்
ஆலம்படைத்தவாண்டவனருளாலே
சீலமுடனுண்டு சிறப்பாயிருங்களென்று
வாழ்த்திநபியிறசூல் வன்மையுள்ளயார்களுடன்
சூழ்ந்தவசபாக்களுஞ் சுற்றுப்படைகளுடன்
மன்னர்நபியெழுந்தார் மதினநகர்போக
முன்பிருந்ததவிசினில் முகம்மதுகனிபாவெழுந்து
அன்புள்ளநபியிறசூ லடிமலரைத்தான்பணிந்து

பண்பாயபுபக்கர் பாதமிசவணங்கி
ஆயுமறாகத்தா வடிமலனைத்தான்பணிந்து
ஓதுமுதுமாருர்பாத முன்மையுடனேபணிந்து
நல்லுடையபாவா தகசவலியார்பதத்தை
தன்னயமாகப்பணிந்து நலமாசநின்றிடவே
அலியார்மனமகிழ்ந் தன்புடனேதானிவந்தி
வலிவாய்ப்புலியாணம் மகிழ்வாயிருமகனையென்றார்
அந்தநல்லவேளையிலே யகமதிறசூல்நபியுந்
தொந்தமதாய்விடைகொடுத்துத் துரிதமாயெழுந்தனரே
மதினாநகர்நோக்கி வள்ளலநபியாவர்களுங்
கதியாய்நடந்து கனமதினாவுஞ்சேர்ந்தாகள்
சேர்ந்தாரவர்களுந் திருமாளிகையிற்போய்
சார்ந்தநபியிறசூல் தானவனருளாலே
ஆலமெங்குமோர்குடையி லன்புடனேதானாண்டு
சீலமுடனீன்விளங்கச் செய்திருந்தார்மதினமதில்
இந்தப்படியிருக்கவெமன்பதியையாளுகின்ற
மைந்தன்முகம்மது கனிபாவாமனமகிழ
மன்னர்களெல்லோரும் வந்துமங்கேதான்பணிந்து
நின்னயமாய்க்கப்பம் நிலையாகக்கட்டிவர
ஆராய்ந்துவேக மருகேமுழக்கிடுவார்
வாரணங்கள்சேனைவகை வகையாய்ச்சூழ்ந்திடவே
முன்னரசரெல்லோரு முறைமையுடனேவீற்றிருந்தார்
மன்னர்துரைமார்கள் மனமகிழ்ந்தசூழ்ந்திருப்பார்
சேனையுடன்மந்திரிமார் சேரவருகிருக்க
மானையொத்தவிழிமடவார் மங்களமும்பாடிநிற்க
நாட்டியமாதர் நலமுடனேயாடிநிற்க
பாட்டுகள்பாடிப் பலகவிஞர்சூழ்ந்துநிற்க
ஆலாத்திகொண்டு மனைப்பெண்களேந்திநிற்க
கோலரத்நவாலாத்திக் கோதையர்களேந்திநிற்க
ஜெகமுழுதும்வாழ்ந்த சிங்காதனம்வீற்றிருந்து
மகுடமுடிதரித்து முகம்மதுகனிபாவாவும்
திட்டமுடன்கலிமாத் தீன்நெறியுந்தானோங்க
சட்டஞ்செலுத்தித் தானுலகமாண்டிருந்தார்

வானம்படைத்த வல்லவன்றன்னருளாலுந்
தீனெறியிற்றுஞ் செல்வநபிபொருட்டாலும்
மங்களமதாக வாழ்ந்திருந்தாரம்மானே
திங்கள்தனையழைத்தச் செல்வநபிமிசவாழி

யார்கள்மிகவாழி யசபாக்கள்தானும்வாழி
பாரில்மாதர்போற்றும் பாத்திமாவவர்கள்வாழி
அலியார்பயின்றெடுத்த வசனுசைனார்தான்வாழி
மலியானவப்பியாசக ளவுலியாக்களும்வாழி
முக்கியவெமன்பதிவாழ முகம்மதுகனிபாவாவாழி
தக்கப்புவியிற் றுணுளமேவார்தாமேவாழி
பப்பாத்தியம்மாளும் பண்டபடனைமிகவாழி
செப்பமுடனிக்கதைசெய் செந்தமிழோர்தான்வாழி
தேடிப்பதிப்பித்த தீன்விளக்கவர்சுற்கூடம்வாழி
ஆமீனல்லாயாமீன் யாறப்பலாலமீன்



பப்பாத்தியாரம்மானை

முற்றிற்று.

